




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 198 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 198 | Sunday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


# 200 தொகுதிகள் நிச்சயம்: 200க்கு மேல் லட்சியம்

## கோவை மாநாட்டில் மு.க.ஸ்டாலின் பேச்சு



**கோவை, மார்ச்.1:**

கோவையில் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' என்ற பெயரில் வாக்குச்சாவடி முகவர்கள் மாநாடு நடைபெற்று வருகிறது. இதில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு பேசியதாவது;

"பாசக்கார மேற்குமண்டலத்தில் உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி. செந்தில் பாலாஜியின் ஆற்றல், எதிரிகளின் தூக்கத்தை கெடுக்கிறது. எதிரிகளின் சிம்மசொப்பனை செந்தில் பாலாஜி. அண்ணா, கருணாநிதி ஆகியோரின் அரசியலில் முக்கிய பங்காற்றிய ஊர் கோவை. உங்களை பார்த்து நானும் உற்சாகமடைகிறேன்.

கடந்த தேர்தலில் இங்கு நாம் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. இந்த முறை வெற்றியை உறுதிப்படுத்துங்கள். பல்வேறு சிக்கல்களை கடந்து, அத்திக்கடவு-அவினாசி திட்டத்தை நிறைவேற்றியுள்ளோம். உலக தரத்தில் கிரிக்கெட் மைதானம் கட்டப்பட உள்ளது. ஏராளமான திட்டங்கள் மேற்கு மண்டலத்துக்கு வர உள்ளது. வரும் தேர்தலில் மேற்கு மண்டலத்தில் உள்ள 39 தொகுதிகளிலும் வெற்றி பெற கடினமாக உழைக்க வேண்டும்.

இந்த தேர்தலில் நாம் 2 கோடியே 50 லட்சம் வாக்குகளுக்கு குறையாமல் வாங்க வேண்டும்.ஒரு பூத்துக்கு 350 வாக்குகள் வாங்க வேண்டும். 200 தொகுதிகள் நிச்சயம். 200 பிளஸ் லட்சியம். பல சமூக ஊடகங்கள் இருந்தாலும், ஒருவரின் வீட்டிற்கு நேரில் சென்று வாக்கு கேட்பது என்பது மிகவும் முக்கியம். நமது சாதனைகளை கூறி வாக்கு கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும். வாக்காளர்கள் வாக்களிக்கும் வரை நமக்கு ஓய்வு என்பதே இருக்கக்கூடாது. வீடு, வீடாக சென்று பணிவாக, கனிவாக, நட்பாக, அன்பாக வாக்கு கேட்க வேண்டும். 75 ஆண்டுகளாக திமுக வலிமையாக இருப்பதற்கு இதுதான் காரணம்.

திராவிட மாடல் ஆட்சியில் ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தி வருகிறோம். மகளிர் உரிமைத்தொகை, மகளிர் விடியல் திட்டம், புதுமைப்பெண், நான் முதல்வன், மக்களை தேடி மருத்துவம், நலம் காக்கும் ஸ்டாலின் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

உங்களிடம் ஒரு புத்தகங்கள் கொடுக்கப்படும். அதில் நமது சாதனைகள் அடங்கிய பட்டியல் உள்ளது. அதனை நீங்கள் படிக்க வேண்டும். இதை நீங்கள் ஒவ்வொரு வீட்டிலும் சென்று சொல்ல வேண்டும். அப்போதுதான் மக்களின் நம்பிக்கை வாக்குகளாக மாறும். நம்பிக்கையோடு பிரசாரம் செய்யுங்கள்.

வளர்ச்சியை பிடிக்காத கட்சியாக பாஜக உள்ளது. எனவே கிளைக்கழகமாக அதிமுகவை கொண்டு முன்னேற பாஜக நினைக்கிறது. ஜெயலலிதா மீது திடீரென மோடிக்கு பாசம் வந்துள்ளது. ஜெயலலிதா புகழ் பாடினால் வாக்குகள் வருமா என எண்ணுகின்றனர். உங்களின் நடிப்பை தமிழக மக்கள் நம்ப மாட்டார்கள்.

கோவை, மதுரைக்கு மெட்ரோவுக்கு பிரதமர் மோடி ஏன் அதுமதி தரவில்லை. தேர்தல் நேரத்தில் கூட தமிழகத்துக்கு நிதி தரவில்லை. தமிழ்நாட்டின் கோரிக்கைகளை நிறைவேற்றாதது ஏன்.? எப்போதெல்லாம் தனக்கு பிரச்சினை வருகிறதோ, அப்போதெல்லாம் டெல்லிக்கு சென்று எடப்பாடி பழனிசாமி சரணடைகிறார். தேர்தல் கால கூட்டணிக்கு ஆயுள் குறைவு. திமுக கூட்டணி உறுதியாக உள்ளது. களத்தில் உழைப்போம். வெல்வோம் ஒன்றாக."

இவ்வாறு அவர் பேசினார்.

# பிரதமர் வருகை: திருப்பரங்குன்றம் கோயிலில் சோதனைக்குப் பிறகே அனுமதி!



**சென்னை, மார்ச்.1:**

திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்கு இன்று (மார்ச் 1) பிரதமர் மோடி வருவதையொட்டி அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மேலும், கோயிலைச் சுற்றி செல்போன் சிக்னலைத் தடுக்கும் ஜாமர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. பலத்த சோதனைக்குப் பிறகே பக்தர்கள் கோயிலின் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

கோயிலில் பாதுகாப்பு குறித்து இன்று சிறப்புப் படையினர் ஆய்வு செய்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் வருகையையொட்டி திருப்பரங்குன்றம் கோயில் மற்றும் சுற்றுப் பகுதி முழுவதும் காவல்துறையின் பாதுகாப்பில் உள்ளது. திருப்பரங்குன்றத்தில் கார்த்திகைதீபதிருவிழாவின்போது மலை உச்சியில் தீபம் ஏற்றுவது குறித்த சர்ச்சை ஏற்பட்டது. இதன்பின்னர் பிரதமர் மோடி தற்போது திருப்பரங்குன்றம் வரவிருப்பதால் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

### பிரதமர் பயணம்

பிரதமர் மோடி குஜராத் மற்றும் ராஜஸ்தான் பயணங்களைத் தொடர்ந்து இன்று(சனிக்கிழமை) இரவு 9 மணியளவில் விமானம் மூலம் சென்னை வருகிறார்.இதையடுத்து, நாளை(ஞாயிற்றுக்கிழமை) காலை புதுச்சேரி செல்லும் அவர், அங்கு ரூ. 2,700 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

மார்ச் 1 மாலை 3 மணியளவில் மதுரைக்குச் செல்லும் பிரதமர் மோடி, அங்கு ரூ. 4,400 கோடி மதிப்பிலான கட்டமைப்புத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். பின்னர், மாலை 4 மணியளவில் திருப்பரங்குன்றம் சுப்ரமணியசுவாமி கோயிலில் தரிசனம் செய்கிறார்.

# அமெரிக்கா, இஸ்ரேலை எச்சரித்து தாக்குதலை தொடங்கிய ஈரான்



**ஈரான், மார்ச்.1:**

அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானை சுற்றிவளைத்து கடல் வழியாகவும், வான் வழியாகவும் என 30-க்கும் மேற்பட்ட இடங்களை குறிவைத்து தாக்குதல் நடைபெற்று வருகிறது.

இதனிடையே, ஈரான் மீது அமெரிக்க ராணுவம் தாக்குதலை தொடங்கி உள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்த டிரம்ப், ஈரான் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன் வைத்தார்.

இந்த நிலையில், இஸ்ரேல்-அமெரிக்கா நடத்தி வரும் தாக்குதல் குறித்து ஈரான் கூறுகையில், 'நீங்கள் தொடங்கி வைத்து விட்டீர்கள்... இனி முடிவு உங்கள் கையில் இல்லை... இதை தொடங்கியது நீங்கள் தான்... உங்களை எச்சரிக்கிறோம். என்று கூறியுள்ளது. மேலும் தங்கள் நாட்டின் உச்ச தலைவரும், அதிபரும் பாதுகாப்பாக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, இஸ்ரேல் மீது பதில் தாக்குதலை ஈரான் தொடங்கி உள்ளது. இஸ்ரேல் நாட்டின் வான் பாதுகாப்பு அமைப்பு ஈரான் ஏவுகணைகளை தடுத்து அழித்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

தங்கள் நாட்டின் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதை இஸ்ரேல் உறுதி செய்துள்ளது.

## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(1-03-2026)
விசுவாவசு ஆண்டு, மாசி-17
பிறை: வளர்பிறை
திதி
திரயோதசி இரவு 7.33 வரை
பிறகு சதுர்த்தசி.
நட்சத்திரம்:
பூசம் காலை 8.53 வரை
பிறகு ஆயில்யம்.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி
எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி
சூலம் - மேற்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 3-4 மணி

| | |
|---|---|
| மேஷம் | கீர்த்தி |
| ரிஷபம் | உழைப்பு |
| மிதுனம் | சாதனை |
| கடகம் | மேன்மை |
| சிம்மம் | நட்பு |
| கன்னி | சாந்தம் |
| துலாம் | நேர்மை |
| விருச்சிகம் | சிந்தனை |
| தனுசு | பாராட்டு |
| மகரம் | ஜெயம் |
| கும்பம் | புகழ் |
| மீனம் | உறுதி |

# எந்த நாட்டுக்கும் திறமை திடீரென வந்து விடாது: பிரதமர் மோடி பேச்சு




**புதுடெல்லி, மார்ச்.1:**

டெல்லியில் தனியார் செய்தி நிறுவனம் நடத்திய 'எழுச்சி பெறும் பாரதம்' என்ற உச்சி மாநாட்டில் நரேந்திர மோடி நேற்று பங்கேற்று பேசினார். அப்போது காங்கிரஸ் கட்சியை கடுமையாக சாடினார். குறிப்பாக, டெல்லி ஏ.ஐ. மாநாட்டில் இளைஞர் காங்கிரசார் சட்டை அணியாமல் போராட்டம் நடத்தியதை சுட்டிக்காட்டி கண்டனம் தெரிவித்தார். தனது உரையில் அவர் கூறியதாவது:

"நாம் நமது உள்ளார்ந்த வலிமையை கண்டுபிடிக்காவிட்டாலோ அல்லது நமது நிறுவனங்களை வலிமைப்படுத்தாமல் இருந்தாலோ எந்த நாடும் நம்முடன் வர்த்தக ஒப்பந்தங்களை செய்திருக்காது. ஆனால் கடந்த 12 ஆண்டுகளில் இந்தியா தனது உள்ளார்ந்த வலிமையை கண்டுபிடித்துள்ளது. இதனால் வளர்ந்த நாடுகள் கூட தற்போது இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தங்களை செய்ய முன்வருகின்றன. எந்த நாட்டுக்கும் திறமை திடீரென வந்து விடாது. அது பல தலைமுறைகளாக கட்டமைக்கப்பட வேண்டும். அறிவு, பாரம்பரியம், கடின உழைப்பு மற்றும் அனுபவத்தால் மெருகூட்டப்பட வேண்டும். நமது அரசு எடுக்கும் நல்ல முடிவுகளை நாட்டு மக்கள் வரவேற்கிறார்கள்.

ஆனால் காங்கிரசுக்கு தெரிந்தது எல்லாம் அனைத்தையும் எதிர்ப்பது மட்டுமே. காங்கிரசின் வாக்குகள் திருடப்படவில்லை. மாறாக, மக்கள் தாங்கள் வாக்களிப்பதற்கு தகுந்த கட்சியாக காங்கிரசை கருதவில்லை. 2000-ம் ஆண்டுக்கு முந்தைய தலைமுறை ஏற்கனவே காங்கிரசுக்கு பாடம் கற்பித்திருந்தது இன்று காங்கிரஸின் நிலை என்னவென்றால், நான்கு மாநிலங்களில் மட்டுமே 50-க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.க்களை கொண்டுள்ளது," இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

# தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கான தேதி ஓரிரு வாரத்தில் வெளியாகிறது?



**சென்னை, மார்ச்.1:**

தமிழகத்தில் ஆளும் திமுக அரசின் பதவிக்காலம் மே மாதம் 10-ந் தேதியுடன் நிறைவடைகிறது. இதேபோல், புதுச்சேரி (ஜூன் 15), மேற்கு வங்காளம் (மே 7), அசாம் (மே 20), கேரளா (மே 23) ஆகிய மாநிலங்களின் பதவிக்காலமும் முடிவடைகிறது. எனவே, இந்த 5 மாநிலங்களில் உள்ள 824 சட்டசபை தொகுதிகளுக்கும் தேர்தலை நடத்த இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக, ஒவ்வொரு மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடனும் தேர்தல் ஆணைய அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் தேர்தல் வன்முறை குறைவு என்பதால், எப்போதும் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்பட்டு வருகிறது. வடமாநிலங்களில்தான் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக பல்வேறு கட்டங்களாக தேர்தல் நடத்தப்படுகின்றன.

அந்த வகையில், தற்போது நடைபெற உள்ள 5 மாநில தேர்தலை கண்காணிக்க 714 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், 233 ஐ.பி.எஸ் அதிகாரிகளும் தேர்தல் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், 497 செலவின பார்வையாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் கடந்த 2021-ம் ஆண்டு சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் 6-ந் தேதி நடைபெற்றது. ஆனால், வாக்கு எண்ணிக்கை மே மாதம் 2-ந் தேதிதான் நடந்தது. கொரோனா காலம் என்பதால், அப்போது முன்கூட்டியே தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது. ஆனால், இந்த முறை வெயிலின் தீவிரத்தை கருத்தில் கொண்டு மே மாதம் தமிழக சட்டசபை தேர்தலை நடத்தலாமா? என்று தேர்தல் ஆணையம் யோசித்து வருகிறது. ஏற்கனவே, 5 மாநில தேர்தல்களை 5 கட்டங்களாக நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ள நிலையில், அதில் கடைசி கட்டமாக தமிழக சட்டசபை தேர்தல் நடத்தப்படலாம் என தெரிகிறது.

தமிழகத்தில் கடந்த 1952-ம் ஆண்டு முதல் சட்டசபை தேர்தல்கள் நடைபெற்று வந்தாலும், ஆரம்பத்தில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களிலேயே தேர்தல் நடந்துள்ளது. அதன்பிறகு பெரும்பாலும் மே மாதமே சட்டசபை தேர்தல் நடைபெற்று வருகிறது. இதற்கு முன்பு, 2001 (மே 10) 2006 (மே 8), 2016 (மே 16) ஆகிய ஆண்டுகளில் மே மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற்றுள்ளது. 2011 (ஏப்ரல் 13), 2021 (ஏப்ரல் 6) ஆண்டுகளில்தான் ஏப்ரல் மாதமே தேர்தல் நடந்துள்ளது.

அந்த வகையில், இந்த ஆண்டும் தமிழகத்தில் மே மாதமே சட்டசபை தேர்தல் நடைபெறும் என்று தெரிகிறது. இந்த நிலையில், தேர்தல் தொடர்பான ஏற்பாடுகளை ஆய்வு செய்வதற்காக, இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் தலைமையில் 7 பேர் கொண்ட குழு 3 நாட்கள் பயணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு வருகை தந்தது.

புதுச்சேரி மாநிலத்தில் சட்டமன்ற தேர்தல் தொடர்பான ஏற்பாடு பணிகளை ஆய்வு செய்து மாநிலத்தேர்தல் ஆணையர் மற்றும் அனைத்து கட்சி முக்கிய பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் காவல்துறையுடன் ஆலோசனை நடத்தின. பின்னர் சென்னையில் இந்திய தேர்தல் கமிஷன் தலைவர் ஞானேஷ் குமார் தலைமையிலான குழு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக ஆய்வு கூட்டங்களை நடத்தியது.

இந்த சூழலில் 3 நாள் பயணத்தைமுடித்துக்கொண்டு சென்னை விமான நிலையத்தில் இருந்து இந்திய தேர்தல் கமிஷன் தலைவர் ஞானேஷ் குமார் தலைமையிலான குழுவினர் டெல்லி புறப்பட்டு சென்றனர். இவர்களை தமிழ்நாடு காவல்துறை (பொறுப்பு) டி.ஜி.பி. வெங்கட்ராமன் மற்றும் தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், சென்னை போலீஸ் கமிஷனர் அருண் உள்ளிட்டோர் வழி அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் இன்னும் ஓரிரு வாரத்தில் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான தேதி அறிவிப்பு வெளியாகும் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஊஞ்சல் உற்சவம்




**தஞ்சாவூர், மார்ச் 01:**
தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (27.02.2026) ஆங்கில மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை முன்னிட்டு காலை தாயாருக்கு திருமஞ்சனம், மாலை 7 மணி அளவில் ஸ்ரீ அலமேலு மங்கை தாயார் பிரகார புறப்பாடு மற்றும் ஊஞ்சல் சேவை சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், ஸ்ரீ அலமேலு மங்கை தாயார் ஊஞ்சல் சேவை குழு மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

**செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

# மாசி தெப்ப உற்சவம்



அருள்மிகு ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி திருக்கோயில் நம்பெருமாள் மாசி தெப்ப உற்சவம் திருப்பள்ளியோடம் 2026 ஒன்பதாம் திருநாள் காலை பல்லக்கில் புறப்பாடு, தீர்த்தவாரி, ஆஸ்தான சேவை.

# தருமபுரி அருகே இருசக்கர வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து - 2 பேர் பலி,


**தருமபுரி, மார்ச். 01:**
தருமபுரி அருகேயுள்ள அங்கனாம்புதூர் பகுதியை சேர்ந்தவர் ஆறுமுகம். இவரது மகன் வினோத் (வயது29). இவர் தருமபுரி நகர் அன்னசாகரம் பகுதியில் வெல்டிங் கடை நடத்தி வந்தார்.

இவர் நேற்றிரவு வேலையை முடித்து விட்டு வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது அங்கனாம் புதூர் என்ற இடத்தில் வந்தபோது எதிரே எம்.ரெட்டியூர் பகுதியை சேர்ந்தவர் முருகன் என்பவரது மகன் ஹரிகிருஷ்ணன் (23) ஓட்டி வந்த பைக் நேருக்கு நேர் மோதியது. இதில் தூக்கி வீசப்பட்டு இருவரும் பலத்த காயம் அடைந்து துடிதுடித்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இந்த விபத்தை பார்த்த அந்த வழியாக வந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்த விபத்து குறித்து அதியமான் கோட்டை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். விபத்தில் இறந்த வினோத், ஹரிகிருஷ்ணன் ஆகியோரது உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தி.மு.க.வில் இணைந்ததன் மூலம் ஜெயலலிதா முதுகில் குத்திவிட்டார் ஓ.பன்னீர்செல்வம் – பியூஷ் கோயல்




**மதுரை, மார்ச் 01:**
மதுரை விமான நிலையத்தில் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

* தமிழகத்தில் NDA கூட்டணியின் தலைவர் எடப்பாடி பழனிசாமி தான்.

* தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மோசமாக உள்ளது. ஊழல் அதிகரித்துள்ளது.

* தி.மு.க.வில் இணைந்ததன் மூலம் ஜெயலலிதா முதுகில் குத்திவிட்டார் ஓ.பன்னீர் செல்வம் என்றார்.

# திருக்கோவிலூர் தொகுதியில் கிராமம் தோறும் வேந்தர் பிரச்சார பயணத்தை தொடங்கி வைத்த துணைப் பொதுச் செயலாளர்



**விழுப்புரம், மார்ச் 01:**
இந்திய ஜனநாயக கட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் பாரிவேந்தர் மற்றும் கட்சியின் தலைவர் இளையவேந்தர் ஆகியோரின் ஆலோசனைப்படி, விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி முழுவதும் கிராமந்தோறும் டாக்டர் பாரிவேந்தர் அவர்களின் புகழும் இந்திய ஜனநாயக கட்சியின் கொள்கைகளையும் விளக்கும் விதமாகவும், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவாகவும் இந்த பிரச்சாரம் நடைபெறுகின்றது.

இந்த பிரச்சார பாடல் குழு தலைவர் கயல் கோபு தலைமையில் குழுவினர் பாடல்கள் மூலம் பிரச்சாரம் செய்யும் பணியினை, மணம்பூண்டி ஊராட்சியில் இந்திய ஜனநாயக கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் செந்தில்குமார் தொடங்கி வைத்தார்.

உடன் மாவட்ட தலைவர்கள் காமராஜ்,பொன்முடி,மாநில இலக்கிய அணி செயலாளர் சிதம்பரநாதன்,மாவட்ட செயலாளர் ராஜேஷ்குமார், மாவட்ட துணை தலைவர் ஹரிகிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் ரமேஷ்,மாவட்ட வேந்தர் பேரவை செயலாளர் குருமூர்த்தி, மாவட்ட கல்வியாளர் பிரிவு செயலாளர் வசந்தன், மாவட்ட அமைப்பு செயலாளர் ரீகன்ராஜ், ஒன்றிய தலைவர்கள் ரமேஷ், வினோத்குமார், மாவட்ட மகளிர் அணி செயலாளர் தேவி பாலமுருகன், மாவட்ட விளம்பர பிரிவு செயலாளர் கார்த்தி,மாவட்ட பொறியாளர் அணி செயலாளர் ஜகத்ராஜேஷ், மாவட்ட ஓட்டுநர் அணி செயலாளர் குரு,ஒன்றிய இளைஞரணி தலைவர் கிருஷ்ணன்,மாவட்ட மாணவரணி செயாலளர் பிரசாந்த்,மாவட்ட ஐடி பிரிவு இணை செயலாளர் பாலசந்திரன் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய கிளை நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## வாடிப்பட்டி அருகே

# தமிழகத்தில் முதல் இலவச மர வங்கி துவக்க விழா




**வாடிப்பட்டி,மார்ச் 01:**
மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே சாணாம்பட்டியில் பார்வை பவுண்டேஷன் சார்பாக 50 ஆயிரம் மரக்கன்றுகள் கொண்ட இலவச முதல் மர வங்கி துவக்க விழா நடந்தது. இந்த விழாவிற்கு வேளாண்மை விஞ்ஞானி டாக்டர் சுப்பிரமணியம் யோகி தலைமை தாங்கினார். கவிஞர் பொன். பனகல் பொன்னையா, அகவிழி கோபி சுவாதி,தங்கச் சித்ரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சாலமன் வரவேற்றார்.

இலவச மர வங்கியை ஜனனி பூரணம் அம்மாள் துவக்கி வைத்தார். இந்த விழாவில் பார்வைபவுண்டேஷன் நிறுவனர் பொறியாளர் சோழன் குபேந்திரன் தமிழகத்தில் முதல் மர வங்கி இங்கு திறக்கப்பட்டுள்ளது.

இந்த மர வங்கியில் கொய்யா, நெல்லி, மாதுளை, நாவல், தென்னை மற்றும் தேக்கு, வேங்கை, புளி, பூவரசு, புங்கை உள்ளிட்ட 25 வகையுடன் 50 ஆயிரம் மரக்கன்றுகள் இலவசமாக விவசாயிகளுக்கும்,மரம் வளர்க்கும் ஆர்வலர்களுக்கும் வழங்கப்படும் என்று அவர் பேசினார். கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்ற தலைவர் மனித தேனீ சொக்கலிங்கம் இயற்கையும் மரங்களையும் காப்போம் என்ற தலைப்பில் பேசினார்.

இயற்கை ஆர்வலர்கள் தங்கராஜ், சகோதரி ஞான சிகாமணி ஆகியோர் வாழ்த்தி பேசினர். இதில் ஏராளமான விவசாயிகள் மற்றும் வன நலம் இயக்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் ராஜ்குமார் நன்றி கூறினார்.

# தியேட்டரில் சிறுமி பாலியல் வன்கொடுமை- திருப்பூர் வாலிபருக்கு 30 ஆண்டு சிறை தண்டனை



**மேலசொக்கநாதபுரம், மார்ச் 01:**
திருப்பூரை சேர்ந்தவர் முகமதுரியாஸ் (வயது27). இவர் இடுக்கி மாவட்டம் மூணாறு அருகில் உள்ள மறையூரை சேர்ந்த 16 வயது சிறுமியுடன் இன்ஸ்டாகிராம் மூலம் பழகி வந்தார்.

இவர்கள் நட்பு அதிகரித்த நிலையில் தனது குடும்ப சூழ்நிலையை சிறுமி தெரிவித்து ஏதாவது வேலைக்கு ஏற்பாடு செய்யுமாறு கூறி உள்ளார். அப்போது திருப்பூருக்கு வந்தால் வேலை வாங்கி தருவதாக அவர் தெரிவித்தார்.

பின்னர் சிறுமியை வரவழைத்து கூட்டம் அதிகம் இல்லாத தியேட்டருக்கு அழைத்து சென்று பாலியல் வன்கொடுமை செய்தார். பின்னர் தன்னுடனே அவர் தங்க வைத்துள்ளார். இதனிடையே சிறுமி மாயமானதை தொடர்ந்து அவரது பெற்றோர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். போலீசார் சிறுமியின் செல்போன் எண்ணை வைத்து விசாரணை நடத்தியதில் திருப்பூரில் பதுங்கி இருந்தது தெரிய வரவே அவரை மீட்டு விசாரித்தனர். அப்போது தன்னை வேலைக்கு வரச்சொல்லி முகமது ரியாஸ் பாலியல் வன்கொடுமை செய்ததாக அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கேரள போலீசார் முகமது ரியாசை கைது செய்தனர். இந்த வழக்கு இடுக்கி போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கில் 35 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு 41 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

விசாரணை முடிந்த நிலையில் முகமது ரியாசுக்கு 30 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூ.1 லட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தனர். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு சட்ட சேவை வாரியம் உரிய இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் தங்கள் உத்தரவில் தெரிவித்தனர்.

# ஆந்திரா: பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் 20 பேர் பலி



**காக்கிநாடா, மார்ச் 01:**
ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே உள்ள வேட்டப்பாளையம் பகுதியில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 20 பேர் உயிரிழந்துள்ளனர்.



சூர்யஸ்ரீ என்ற பெயரில் இயங்கி வந்த பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஆலையில் வைக்கப்பட்டு இருந்த பட்டாசுகள் முழுவதுமாக வெடித்து சிதறியது.

இந்த விபத்தில் ஆலையில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்கள் 20 பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் கட்டிட இடிபாடுகளில் சிக்கி படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இந்த பட்டாசு ஆலை விபத்து குறித்து தகவல் அறிந்ததும் விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

மேலும் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் பட்டாசு வெடி விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மாசி மாதம் பௌர்ணமி கிரிவலம்


**திருவண்ணாமலை, மார்ச் 01:**
அருள்மிகு அண்ணாமலையார் மலை கிரிவலம் மாசி மாத பௌர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம் மார்ச் 02.03.2026 திங்கட்கிழமை மாலை 6:29 மணிக்கு தொடங்கி மறுநாள் 03.03.2026 செவ்வாய்க்கிழமை மாலை 5:52 மணிக்கு பௌர்ணமி நிறைவடைகிறது. கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது . **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# வள்ளிமலை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மாசி பிரம்மோற்சவத்தை முன்னிட்டு தேரோட்டம்: திரளான பக்தர்கள் தரிசனம்!



**வேலூர், மார்ச் 01:**
வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், வள்ளிமலையில் பிரசித்தி பெற்ற ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோயில் அமைந்துள்ளது. அதாவது இந்த கோயிலில் வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீசுப்பிரமணியர் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார். இந்த ஆலயம் கி.பி.,6ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

அந்த ஆலயத்தில் கடந்த 21 ஆம் தேதி மாசி மாத பிரம்மோற்சவம் தொடங்கியது. இதன் முக்கிய நிகழ்வான தேரோட்டம் வெள்ளிக்கிழமை தொடங்கியது. ஸ்ரீசுப்பிரமணியர் வள்ளி தெய்வானைக்கு மாசி மாத பிரம்மோற்சவத்தை முன்னிட்டு அலங்கரிக்கப்பட்ட உற்சவர் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இந்த தேரோட்டமானது கோயிலை சுற்றி வலம் வந்தது குறிப்பிடத்தக்கது.

பக்தர்கள் திரண்டு வந்து ஸ்ரீசுப்பிரமணியரை பயபக்தியுடன் வழிபட்டனர். தங்களது வேண்டுதலை நிறைவேற்றக் கோரி உப்பு மற்றும் மிளகு ஆகியவற்றை அந்த தேரின் மீது வீசி தங்களது நேர்த்திக்கடனை வேண்டிக் கொண்டனர்.

தொடர்ந்து நான்கு நாட்கள் இந்த தேரோட்டம் நடைபெறுகிறது. அதாவது இரண்டாம் தேதி திங்கள்கிழமை மாலை தேரோட்டம் நிறைவு பெறுகிறது. செவ்வாய்க்கிழமை காலை வள்ளி திருமணம் நடைபெறுகிறது.

இந்த தேரோட்டத்தில் வேலூர், ராணிப்பேட்டை, ஆந்திரா, கர்நாடகா, சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும், பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் திரண்டு வந்து ஸ்ரீ சுப்பிரமணியரை வழிபட்டனர். இந்த விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் வள்ளிமலை ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தின் செயல் அலுவலர் திருநாவுக்கரசு, எழுத்தர் ராஜ்குமார் மற்றும் விழா கமிட்டியினர், அறங்காவலர் குழு தலைவர் சாரதி மற்றும் கோயில் பணியாளர்கள் வெகு விமரிசையாக செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# விஜய் மனைவி சங்கீதா விவாகரத்து இளம்பெண்ணின் வீடியோ




**சென்னை, மார்ச் 01:**
தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமும், தவெக தலைவருமான விஜய் இடமிருந்து அவரது மனைவி சங்கீதா விவாகரத்துக் கோரி மனுத்தாக்கல் செய்துள்ள சம்பவம் அவரது ரசிகர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே இருவரும் ஒன்றாக இல்லை என்றும், குடும்பத்தில் பிரச்சனை என்றும் தகவல்கள் வெளியான நிலையில் இன்று அது உறுதியாகி உள்ளது. பிரபல நடிகை உடனான தொடர்பே இந்த விவாகரத்து முடிவுக்கு காரணம் என சங்கீதா குறிப்பிட்டுள்ளார்.

இந்த செய்தி அவரது ரசிகர்களிடையே பெரும் சோகத்தையும்,அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. ஆனால் தற்போதுவரை இந்த குற்றச்சாட்டுக்கு விஜய் தரப்பிலிருந்து எந்தப் பதிலும், மறுப்பும் வரவில்லை. இந்த வழக்கு தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக நேரில் ஆஜராகுமாறு விஜய்க்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் இந்த வழக்கு செங்கல்பட்டு குடும்பநல நீதிமன்றத்தில் ஏப்.20ஆம் தேதி விசாரணைக்கு வருகிறது.

விஜய் மற்றும் சங்கீதா ஆகியோருக்கு 1999-இல் திருமணம் நடந்தது. இவர்களுக்கு ஜேசன் சஞ்சய் மற்றும் திவ்யா சாஷா ஆகிய இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

சங்கீதாவின் விவாகரத்து மனு இணையத்தில் பெரும் பேசுபொருளாகியுள்ள நிலையில், இதுகுறித்து பேசிய ஒரு இளம்பெண்ணின் வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது.

அந்த வீடியோவில், தளபதிக்கு 1000 தங்கச்சி இருக்கும், 1000 அக்கா இருக்கோம்,பொண்டாட்டியா கூட இருந்துட்டு போறோம், எங்க தளபதிக்காக நாங்க நிப்போம்" என்று அப்பெண் பேசியுள்ளார்.


START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009


சிவா விஷ்ணு
திருமண தகவல் மையம்
அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்
மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும்
நம்பகமான மற்றும் விரைவான சேவை
✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
✓ ஜாதக பொருததம் பார்த்து அனுப்பப்படும்
✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்
தொடர்புக்கு: 9150989424


Vilambaram
GET... SET..... SHOOT
YOUR SALES WITH SOCIAL MEDIA
ASK US HOW ?
CONTACT US TODAY!
+91-7789941009
www.vilambaram.com


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bunglows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


Experienced Vedic Astrologer
Jyotish Ratna
Thirumoolam Saraswathi
Horoscope Predictions
Marriage Matching
Gemstone Remedies
Accurate & Trustworthy Guidance
8148054536


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887


WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


Sri Manjal Mart
YOUR DESIRE WE DELIVER
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
* Car Foam Pressure Wash
* Teflon Coating
* Ceramic Wax Treatment
* Under Chassis Painting
* Interior Foam Wash / Stain Remover
* Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

# கவிதை அரங்கம்!






உறங்காத
விழிகளுக்குள்
மறைந்துகொண்டு
இம்சிக்கிறாய்
இதமாய்

துன்பக் கடலில்
தத்தளித்தபோது
அலைபோல்
வந்தென்னை
கரைசேர்த்தாய்

சுட்டெரிக்கும்
வெயிலிலும்
மழைசாரலாய்
நீயென்னை
கடக்கயில்
இதயமும்
நனையுதே

என்
ஒவ்வொரு
நொடியின்
தொடக்க
புள்ளி நீ

# வாழ்க்கை தத்துவம்...



ஒருவரின் அருமையை அவர்களை பிரியும் தருணத்தில் மட்டுமே உணர முடியும், நினைவுகளின் துணையோடு.

ஒருவரை இழக்கும் போது வரும் கண்ணீரைவிட, அவர்களை இழக்கக்கூடாது என்று நினைக்கும்போது வரும் கண்ணீருக்கு இன்னும் வலி அதிகம்.

எதுவுமே உயர்ந்தது இரண்டு முறை, கிடைப்பதற்கு முன்பு தவறவிட்ட பின்பு.

தனிமை கொஞ்சம் வித்தியாசமானது. நாமே அதை எடுத்துக்கொண்டால் அது இனிக்கும், மற்றவர்கள் நமக்கு அதை கொடுத்தால் கசக்கும்.

எல்லோருடைய இதயத்திலும் காயங்கள் உண்டு. அதை வெளிப்படுத்தும் விதம்தான் வித்தியாசம். சிலர் கண்ணீராக, சிலர் புன்னகையாக.

# "வரனெல்லாம் வரமல்ல"



சுமதியின் வீட்டில் காலையிலிருந்தே கல...கலப்பு தொடங்கியிருந்தது.

மணப்பெண் புடவை, மல்லிகைப் பூ வாசம், சமையலறை அவசரம்.

“சீக்கிரம்... சீக்கிரம்... மாப்பிள்ளை வீட்டுக்காரங்க பத்து மணிக்குள்ளார வந்துடுவாங்க...” என்கிற எச்சரிக்கைகள்.

அம்மாவின் குரலில் பதட்டம்.

அப்பாவின் முகத்தில் பயம்.

சுமதி மட்டும் வெளியே அமைதியாக இருந்தாள். மனதிற்குள் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். “கடவுளே... இது நல்லபடியாக முடிஞ்சா போதும்...”

பத்து மணி ஆனது. பதினொன்று ஆனது. போன் மணி அடித்தது.

மாப்பிள்ளையின் அப்பா பேசினார். “வர்ற வழியில மாப்பிள்ளை வந்த கார் டயர் வெடிச்சிடுச்சு.... ஸ்டெப்னி மாற்றுவதற்குள் நல்ல நேரம் கடந்து போச்சு.... இதை நல்ல சகுனமாத் தோணலை... இப்போ வர முடியாது.... இன்னொரு நாள் வெச்சுக்கலாம்"

அவ்வளவுதான்.

அம்மா முகம் சுருங்கியது. அப்பா தலை குனிந்தார்.

தரகர் அப்பாவிடம் சரமாரியாய்த் திட்டுக்கள் வாங்கிக் கொண்டு வெளியேறினார்.

“என்ன அவமானம் இது...” என்று உறவினர்கள் கிசுகிசுத்தார்கள்.

சுமதிக்கு உள்ளே எதோ உடைந்தது.

அடுத்த வாரம், தரகர் போன் செய்து அந்தத் தகவலைச் சொன்னார்.

“அந்த மாப்பிள்ளைக்கு நேற்று இரவு மாரடைப்பு... காப்பாத்த முடியலையாம்...”

சுமதியின் கண்களில் கண்ணீர் வரவில்லை. உள்ளத்தில் ஒரு விசித்திர அமைதி உண்டானது.

அம்மா மெதுவாக சொன்னாள்: “நடப்பதெல்லாம் நன்மைக்கேன்னு சொல்வாங்க... ஆனா சில சமயம் நடக்காதது கூட நன்மைல முடியுது.”

(முற்றும்)

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*நிருபர் : தீபாவளிக்கு ரிலீசாகுற உங்க படம் பிச்சுக்கிட்டுபோகும்ன்னு சொல்றீங்களே,,,,, படத்துக்கு என்ன பெயர்*

*தயாரிப்பாளர் : "ராக்கெட்டு"*



# தினம் ஒரு சமையல்



## கோவில் புளியோதரை

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| புளி | -2 பெரிய எலுமிச்சை பழ அளவு |
| மஞ்சள் பொடி | -அரை டீஸ்பூன் |
| சாதம் உதிரியாக வடித்து ஆற வைத்தது | -ஒரு கப் |
| உப்பு | -தேவையான அளவு |

**பொடி அரைக்க**

வெந்தயம் -ஒரு டீஸ்பூன்
எள் -ஒரு டீஸ்பூன்

**தாளிக்க**

| | |
|---|---|
| கடுகு | -ஒரு டீஸ்பூன் |
| கடலைப்பருப்பு | -ஒரு டீஸ்பூன் |
| உளுத்தம் பருப்பு | -ஒரு டீஸ்பூன் |
| வரமிளகாய் | -3 |
| கருவேப்பிலை | -2 ஆர்க்கு |
| நல்லெண்ணெய் | -3 டேபிள்ஸ்பூன் |
| பெருங்காயம் பொடி | -மூன்று சிட்டிகை |

**செய்முறை:**




புளியை 15 நிமிடம் ஊற விட்டு இரண்டு டம்ளர் நீர்விட்டு கரைத்து வடித்து கொள்ளவும். இதனுடன் தேவையான உப்பு மற்றும் மஞ்சள் பொடி சேர்த்து ஒரு அடிகனமான பாத்திரத்தில் ஊற்றி, கொதிக்க விடவும். நன்கு கொதித்து புளி, விழுது போல் ஆனவுடன் அடுப்பிலிருந்து இறக்கவும்.

வெந்தயம் மற்றும் எள்ளை லேசாக வெறும் வாணலியில் வறுத்து எடுத்து ஆறவிட்டு மிக்ஸியில் கொரகொரப்பாக அரைத்துக் கொள்ளவும்.

வாணலியை சூடாக்கி நல்லெண்ணெயை ஊற்றி சூடானவுடன், தாளிக்க கொடுத்துள்ளவற்றை சேர்த்து வறுத்து எடுத்து ஆறின சாதத்தில் கொட்டவும்.

பிறகு புளிவிழுதையும் சாதத்துடன் சேர்த்து நன்கு கிளறவும். அடுத்து அரைத்து வைத்துள்ள புளியோதரைப் பொடியையும் சேர்த்து நன்கு கிளறவும். சுவையான கோவில்களில் செய்யப்படும் புளியோதரை தயார்.

# முட்சங்கன் பயன்கள்



முட்சங்கன் (சங்கஞ்செடி) ஒரு சிறந்த சித்த மருத்துவ மூலிகையாகும்இது முக்கியமாக வாத நோய்கள்மூட்டு வலி (முடக்கு வாதம்கீல் வாதம்) மற்றும் நரம்புத் தளர்ச்சியை குணப்படுத்த பயன்படுகிறது. இதன் இலைகள் தோல் நோய்களை (சிரங்குசொறி) குணப்படுத்தவும்இலைச்சாறு கபத்தை வெளியேற்றி இருமலை அடக்கவும்வேர் சளி மற்றும் கோழையை அகற்றவும் உதவுகிறது.

முட்சங்கன் மூலிகையின் முக்கிய பயன்கள்:

வாத நோய்கள்: முடக்கு வாதம் மற்றும் கீல் வாதத்தைக் குணப்படுத்த இலைகள் பயன்படுகின்றன FACEBOOK.

சரும நோய்கள்: இலைகளை அரைத்துச் சிரங்குசொறிபுண்கொப்பளம் ஆகியவற்றின் மீது பூசி வந்தால்அவை விரைவாகக் குணமாகும் விக்சனரி.

இருமல் மற்றும் சளி: இலைச் சாறு குழந்தைகளில் கபத்தை வெளியேற்றிஇருமலைக் கட்டுப்படுத்தும் விக்சனரி. வேர் கோழையகற்றியாகச் செயல்படுகிறது FACEBOOK.

உடல் ஆரோக்கியம்: இலைகள் உடல் பலத்தை அதிகரிக்கும் FACEBOOK.

மூலிகை வைத்தியம்: இலைகளை நெல்லிக்காய் அளவு பாலில் கலந்து சாப்பிடுவது சித்த மருத்துவத்தில் ஒரு சிறந்த தீர்வாகக் கருதப்படுகிறது VIKATAN.

குறிப்பு: எந்தவொரு மூலிகையையும் மருத்துவப் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளும் முன் தகுந்த மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது நல்லது.

# லெஜெண்ட் பட நடிகை வெட்டிய கேக் விலை 16 கோடியா? அதிர்ச்சி ஆன ரசிகர்கள்






ஹிந்தி, தெலுங்கில் பிரபல நடிகையாக இருப்பவர் ஊர்வசி ரவுடேலா. தாராள கிளாமர் ஆக படங்கள் மற்றும் பாடல்களில் தோன்றி ரசிகர்ளை தொடர்ந்து கவர்ந்து வருகிறார் ஊர்வசி.

தமிழில் லெஜெண்ட் சரவணன் ஹீரோவாக நடித்த லெஜெண்ட் படத்தில் ஊர்வசி ஹீரோயினாக நடித்திருந்தார்.

சமீபத்தில் தனது 32வது பிறந்தநாளை ஊர்வசி கொண்டாடி இருந்தார். அதில் அவர் வெட்டிய 7 அடுக்கு கொண்ட கேக் தான் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

அதில் வைரங்கள் பதிக்கப்பட்டு இருப்பதாகவும், அதனால் அந்த கேக் மொத்த மதிப்பு 16 கோடி ரூபாய் என செய்தி வெளியாகி இருக்கிறது.

அதை அவரே தனது இன்ஸ்டா பக்கத்தில் வெளியிட்டு இருக்கிறார்.



ஹீரோயின் வாய்ப்பு இல்லை என்றாலும் சின்ன ரோல்களிலும் கேத்ரின் தெரசா நடித்து வருகிறார்.

அவர் ட்ரெண்டி உடையில் போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் புகைப்படங்களை பாருங்க.

சினிமா

# முதல் நாள் தாய் கிழவி படம் செய்துள்ள வசூல்.. எவ்வளவு தெரியுமா



அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கத்தில் ராதிகா சரத்குமார் நடிப்பில் உருவாகி நேற்று வெளிவந்த படம் தாய் கிழவி.

இப்படத்தை முன்னணி ஹீரோவான சிவகார்த்திகேயன் தயாரிக்க, நிவாஸ் கே பிரசன்னா இசையமைத்திருந்தார்.

மேலும், அருள்தாஸ், முனீஸ்காந்த், சிங்கம்புலி, பாலசரவணன், ரைச்சல் ரபேக்கா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர்.

பெரிதும் எதிர்பார்ப்புடன் நேற்று வெளியான தாய் கிழவி படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்து வருகிறது. விமர்சன ரீதியாக பட்டையை கிளப்பி வரும் தாய் கிழவி படம் முதல் நாள் உலகளவில் செய்த வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இப்படம் உலகளவில் முதல் நாள் ரூ. 3.3 கோடி வசூல் செய்துள்ளது. இது இப்படத்திற்கு கிடைத்துள்ள சிறந்த ஓப்பனிங் ஆகும்.

# சிவபெருமானின் பலவகை தாண்டவமும் ஆடிய தலமும்!



1. சிவபெருமான் காளிகா தாண்டவம் ஆடுவது எப்போது? எங்கு?
காளிகா தாண்டவம் - படைத்தல் செய்யும் போது.
தலம் - நெல்லையப்பர் கோவில், திருநெல்வேலி.
ஆடிய இடம் - தாமிர சபை

2. சந்தியா தாண்டவம் ஆடுவது எப்போது? எங்கு?
சந்தியா தாண்டவம் - காத்தல் செய்யும் போது.
தலம்- மீனாட்சி அம்மன் கோவில்,மதுரை.
ஆடிய இடம் - வெள்ளி அம்பலம்

3. சங்கார தாண்டவம் ஆடுவது எப்போது?
சங்கார தாண்டவம் - அழித்தல் செய்யும் போது.

4. திரிபுர தாண்டவம் ஆடுவது எப்போது? எங்கு?
திரிபுர தாண்டவம் - மறைத்தல் செய்யும் போது.
தலம்- குற்றாலநாதர் கோவில், குற்றாலம்.
ஆடிய இடம் - சித்திர சபை.

5. ஊர்த்துவ தாண்டவம் ஆடுவது எப்போது?எங்கு?
ஊர்த்தவ தாண்டவம் - அருளல் செய்யும் போது.
தலம்- ஊர்த்தவதாண்டவர் கோவில், திருவாலங்காடு,
ஆடிய இடம் - இரத்தின சபை.

6. ஆனந்த தாண்டவம் ஆடுவது எப்போது?எங்கு?
ஆனந்த தாண்டவம் - இவ்வைந்து செயல்களையும் செய்யும் இடம்.
தலம்- நடராஜர் கோவில், சிதம்பரம்.
ஆடிய இடம் - கனக சபை.

7. கௌரி தாண்டவம் ஆடுவது எப்போது?எங்கு?
கௌரி தாண்டவம் - பார்வதிக்காக ஆடிய போது.
தலம்- திருப்பத்தூர்.

8. அஜபா நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே?
அஜபா நடனம்- சிவபெருமான் மேல்மூச்சில், கீழ்மூச்சில் (தவளை போல்) அசைந்தாடிய நடனம்.
ஆடிய தலம்- திருவாரூர்

9. உன்மத்த நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே?
சிவபெருமான் பித்தனைப் போல் தலை சுற்றி ஆடிய நடனம் உன்மத்த நடனம் ஆகும்.
ஆடிய தலம்- திருநள்ளாறு.

10. தரங்க நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே?
தரங்க நடனம் என்பது கடல் அலை போல் அசைந்து ஆடுவது.
இதை சிவபெருமான் நாகப்பட்டினத்தில் ஆடினார்.

11. குக்குட நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே?
குக்குட நடனம் என்பது கோழி போல் ஆடுவது.
ஆடிய தலம் - திருக்காறாயில்.

12. பிருங்க நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே?
பிருங்க நடனம் என்பது வண்டு மலரைக் குடைவது போல் ஆடுவது. இதை சிவபெருமான் ஆடியது இடம் திருக்கோளிலி ஆகும்.

13. கமல நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே?
கமல நடனம் என்பது தாமரை காற்றில் அசைவது போல் ஆடுவது.
ஆடிய தலம்-திருவாய்மூர்.

14. ஹம்சபாத நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே?
ஹம்சபாத நடனம் என்பது அன்னம் போல் அடியெடுத்து ஆடுவது.
ஆடிய தலம் - திருமறைக்காடு (வேதாரண்யம்)



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

# தினம் ஒரு தலைவர்கள்


# ஸ்ரீ அரவிந்தர் வரலாறு



ஸ்ரீஅரவிந்தர் வட இந்தியாவின் கொல்கத்தா நகரில் பிறந்தார். கிருஷ்ண தனகோஷ், ஸ்வர்ணலதா என்போரின் மகன். ஐந்து வயதான போது மூத்த சகோதரர்கள் விநய பூஷன், மன்மோகன் ஆகியோரோடு டார்ஜிலிங்கில் லோரெட்டோ கான்வென்ட்டில் சேர்ந்தார். 1879-இல் கல்வி கற்பதற்காகச் சகோதரர்களோடு இங்கிலாந்து சென்றார். கேம்ப்ரிட்ஜில் கல்வி கற்கும் போதே புரட்சிகரமான சிந்தனையுடையவராகக் காணப்பட்டார். தாமரையும் குத்து வாளும் என்ற ரகசிய சங்கத்தில் உறுப்பினரானார். பெப்ரவரி 1893-இல் இந்தியா மீண்டார். அரவிந்தர் தாயகம் திரும்பிய கப்பல் விபத்துக்குள்ளாகி அவர் மறைந்தார் என்ற தவறான தகவலால் அதிர்ந்து தந்தையார் இறந்தார். அதனால் தாயார் சுவர்ணலதா தேவி மனநோயாளி ஆனார். இந்தியா திரும்பிய அரவிந்தர், பரோடா சமஸ்தானத்திலும் அரசுப் பணிகளிலும் கடமையாற்றினார்.

ஸ்ரீஅரவிந்தரின் சிலையுரு சுதந்திரப் போராட்டத்தில் இணைதல்

1906-இல் பரோடாவை விட்டு நீங்கி கொல்கத்தா சென்றார்.1906-இல் கல்கத்தா தேசியக் கல்லூரியின் முதல் முதல்வரானார். பரோடாவில் பணிபுரியும் காலத்தில் ஏற்பட்ட இந்தியப் பண்பாட்டுணர்வும் பின்பு ஏற்பட்ட வங்கப் பிரிவினையும் அவரை இந்திய விடுதலைப் போராட்டத்தில் இணையச் செய்தன. 1907 மற்றும் 1908-ஆம் ஆண்டுகளில் இருமுறை அந்நிய ஆட்சியினரால் சிறை வைக்கப்பட்டார்.



ஆன்மீகத்தில் ஈடுபாடு

1904-ஆம் ஆண்டிலிருந்தே பிரணாயாமம் பயிலத் தொடங்கிய போதும் சிறை வாழ்க்கை யோக நெறியில் அதிகம் அக்கறை கொள்ள வைத்தது. ஸ்வராஜ் (விடுதலை) என்பதை அரசியற் கண்ணோட்டத்தில் மட்டுமன்றி ஆன்மீகக் கண்ணோட்டத்திலும் பொருள் கொண்டார். பரமனின் ஆட்சியைப் பூமியில் நிலை நாட்டுவதற்கு விடுதலை முதற்படி என்று கருதியவர்.

1909-இல் சிறையிலிருந்து விடுதலை பெற்றதை அடுத்து அரசியல் இயக்கங்களைத் தவிர்த்துக் கொண்டு யோக நெறியில் முழுக் கவனத்தையும் செலுத்தினார். 1910-இல் ஷாம்சுல் ஆலம் கொலை வழக்கில் அரவிந்தர் மேல் குற்றம் சாட்டப்பட்டது. கைதாவதிலிருந்து தப்பிக்க அரவிந்தர் சந்திர நாகூருக்குத் தப்பிச் சென்றார். அங்கிருந்து ஏப்ரலில் மாறுவேடத்தில் பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த புதுச்சேரிக்கு வந்தார். ஆங்கிலேய அரசிற்கு எதிரான கொந்தளிப்பில் இருந்து முற்றாக விலகிக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றதை அடுத்து யோகநெறியிலே தன்னைப் பக்குவப்படுத்துவதில் முழுக்கவனத்தையும் செலுத்தினார். அங்கு ஆசிரமம் அமைத்து தியானத்திலும் யோகத்திலும் ஈடுபட்டார். பாரதியாரோடு நட்புக் கொண்டார். சாவித்திரி காவியத்தைப் படைத்தார்.

அரவிந்தரின் சிந்தனைகள்

ஸ்ரீ அரவிந்தர் தனது சிந்தனைகளை ஆர்யா என்ற தனது ஆன்மீக இதழில் (1914 - 1921) எழுதினார். யோகத்தின் குறிக்கோள் உள்ளார்ந்த தன்வளர்ச்சியாகும். தன் வளர்ச்சியின் பரிணாமப்படிகள் மனிதனின் பூவுலக வாழ்வினைத் தெய்வவடிவில் அமைக்கும் என்று நம்பினார். உயர்நிலை மனத்தை உருவாக்கும்போது மனித வாழ்வின் இயல்பே மாறிவிடும் என்றும் தெய்வீக நிலை தோன்றும் என்றும் வற்புறுத்தினார். அரவிந்தர் சனாதன தர்மத்தினை ஆழமாக நோக்கியவர். வேதம், உபநிடதம், கீதை பற்றியும் இந்தியப் பண்பாடு பற்றியும் தமது கருத்துக்களை முன்வைத்தார்.

# பிரதமர் மோடியை ஹிட்லருடன் ஒப்பிட்ட பேராசிரியர் பணியிடைநீக்கம்

புதுடெல்லி, மார்ச் 1:

ஹரியாணாவின் சோனிபட்டில் உள்ள ஓ.பி. ஜிண்டால் குளோபல் பல்கலைக்கழகத்தில் படித்து வந்த மாணவர் விக்யாத் பாலாஜியின் தந்தை விஷால் பஜாஜ், அந்தப் பேராசிரியரின் நடத்தை குறித்து மனித உரிமை ஆணையத்தில் புகார் அளித்ததையடுத்து, பல்கலைக்கழக நிர்வாகம் அவரை ஒரு பருவத்துக்கு இடைநீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளது.

முதலாமாண்டு படிக்கும் விக்யாத் பஜாஜ் கடந்த அக்டோபரில் உரி பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடியாக நடத்தப்பட்ட ராணுவத் தாக்குதல் குறித்த கட்டுரை எழுதியபோது அந்தப் பேராசிரியருடன் பிரச்னை தொடங்கியுள்ளது. அந்தக் கட்டுரை எழுதியதற்காக தனது மகனை, பேராசிரியர் வகுப்பறையில் மோசமாக நடத்தியதாக விஷால் பஜாஜ் குற்றஞ்சாட்டியுள்ளார். அதைத் தொடர்ந்து, அரசியல் பாடம் எடுக்கும்போது பிரதமர் மோடியை ஹிட்லருடன் ஒப்பிட்டு அந்தப் பேராசிரியர் பேசியுள்ளார். மேலும், தேசப் பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகளையும் அவர் அவமதிக்கும் வகையில் வகுப்பறையில் மாணவர்களிடம் கருத்துக் கூறியுள்ளார்.

அதே நேரத்தில் தன் மகன் தொடர்ந்து இந்திய அரசு, பிரதமர் மற்றும் ராணுவத்தைப் புகழ்ந்து பேசுவதால், அங்கு பேராசிரியர்கள் சிலர் இணைந்து அவரை வேண்டுமென்று குறிவைத்து அவமதித்து வந்துள்ளனர்.

இதனால், தன் மகன் மிகவும் மனஅழுத்தத்துக்கு உள்ளாகி மன ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார் என்று மனித உரிமை ஆணையத்தில் விஷ்வல் பாலாஜி அளித்த புகாரில் கூறப்பட்டுள்ளது.

# சட்டம் இயற்ற நாடாளுமன்றத்துக்கு முழு அதிகாரம்: உச்சநீதிமன்றம்

புதுடெல்லி, மார்ச் 1:

தடை விதிக்கப்பட்ட இந்திய தண்டனைச் சட்டத்தின் (ஐபிசி) பிரிவு 124ஏ-க்கு (தேசத் துரோகம்) மாற்றாக பிஎன்எஸ் 152-ஐ மத்திய அரசு மறைமுகமாக அறிமுகப்படுத்தியுள்ளதாக உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதி ஜயமால்ய பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு வெள்ளிக்கிழமை விசாரித்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ஒருவர் வாதிடுகையில், 'கடந்த 2022, மேமாதம் உச்சநீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் அமர்வு ஐபிசி பிரிவு 124ஏ-க்கு தடை விதித்தது. மேலும், இந்தச் சட்டப் பிரிவை மத்திய அரசு மறுபரிசீலனை செய்யும் வரை இதில் காவல் துறையினர் எவ்வித புதிய முதல் தகவல் அறிக்கைகளையும் (எஃப்ஐஆர்) பதிவு செய்யக் கூடாது என மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டது. இதையடுத்து, தேசத் துரோக சட்டத்தை மறுபரிசீலனை செய்வதாக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு உறுதிமொழியளித்தது. ஆனால் இந்திய இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பிஎன்எஸ் பிரிவு 152 வழிவகை செய்கிறது.

இதன்மூலம் உச்சநீதிமன்றத்தில் தாங்கள் அளித்த உறுதிமொழியை மீறி மீண்டும் தேசத் துரோக சட்டத்தை பிஎன்எஸ் வாயிலாக மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதை ஏற்றுக்கொள்ளக் கூடாது' என்றார். இதைத் தொடர்ந்து நீதிபதிகள் அமர்வு, 'ஒரு சட்டத்தை இயற்ற நாடாளுமன்றத்துக்கு முழு அதிகாரம் உள்ளது; உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு உறுதிமொழி அளிப்பது நாடாளுமன்ற சட்ட இயற்றும் நடைமுறையைக் கட்டுப்படுத்தாது' எனக் கூறி இந்த மனுக்கள் மீதான விசாரணையை ஹோலி பண்டிகைக்குப் பின் ஒத்திவைத்தது.

# மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை: 10 மாதங்களில் ரூ.9.81 லட்சம் கோடியாக அதிகரிப்பு



புதுடெல்லி, மார்ச் 1:

மத்திய தலைமை கணக்குத் தணிக்கை அதிகாரி (சிஜிஏ) வெள்ளிக்கிழமை வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி, நாட்டின் நிதி நிலை குறித்த முக்கியத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வரவும், செலவினமும்: ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான நடப்பு நிதியாண்டின் முதல் 10 மாதங்களில் மத்திய அரசின் மொத்த வரவு ரூ.27.08 லட்சம் கோடியை எட்டியுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட வருடாந்திர இலக்கில் 79.5 சதவீதமாகும்.

இதே காலகட்டத்தில் அரசின் மொத்த செலவினம் ரூ.36.9 லட்சம் கோடியாக உள்ளது; இது முழு ஆண்டுக்கான மதிப்பீட்டில் 74.3 சதவீதமாகும். வரி வசூல் உள்ளிட்ட வருவாய் வரவுகள் மூலம் அரசுக்கு ரூ.26.51 லட்சம் கோடி கிடைத்துள்ளது. இது ஆண்டு இலக்கில் 79.3 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. அரசின் வருவாய் பற்றாக்குறை ரூ.1.96 லட்சம் கோடியாக பதிவாகியுள்ளது. இது ஆண்டு இலக்கில் 37.3 சதவீதமாக மட்டுமே உள்ளது.

வரி வசூல் வருவாய்: மத்திய அரசின் நிகர வரி வசூல் மிகவும் வலுவாக உள்ளது. ஜனவரி இறுதி வரை ரூ.21 லட்சம் கோடி வரி வசூலாகியுள்ளது. இது ஆண்டு இலக்கில் 78.3 சதவீதமாகும். கடந்த டிசம்பர் வரை இந்த வரி வசூல் 68.3 சதவீதமாக மட்டுமே இருந்தது குறிப்பிடத்தக்கது. எனினும், முந்தைய 2024-25 நிதியாண்டின் இதே காலத்தில் வரி வசூல் இலக்கில் 88.1 சதவீதம் எட்டப்பட்டிருந்தது.

ஈவுத்தொகை வருவாய்: அரசுக்குக் கிடைக்கும் லாபப்பங்கு மற்றும் ஈவுத்தொகை (டிவிடெண்ட்) வருவாய் ஜனவரி இறுதி வரை ரூ.3.5 லட்சம் கோடியாக உள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 93 சதவீதமாகும். முந்தைய ஆண்டு இதே காலத்தில் இது 99 சதவீதத்தை எட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

மூலதனச் செலவு அதிகரிப்பு: உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கான மூலதனச் செலவினங்களை மத்திய அரசு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஏப்ரல்-ஜனவரி காலக்கட்டத்தில் ரூ.8.42 லட்சம் கோடி செலவிடப்பட்டுள்ளது. இது ஆண்டு இலக்கில் 76.9 சதவீதமாகும். இது கடந்த டிசம்பர் மாதம் வரை ரூ.7.87 லட்சம் கோடியாக (70.3%) மட்டுமே இருந்தது.

ஜனவரி மாத நிலவரம்...: முந்தைய 2024-25 நிதியாண்டின் இதே ஜனவரி மாதத்தில் நிதிப் பற்றாக்குறை ரூ.2.6 லட்சம் கோடியாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இது ரூ.1.3 லட்சம் கோடியாகக் குறைந்துள்ளது. இது அரசின் நிதி மேலாண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

# ரூ.1000 கோடி மோசடி: தலைமறைவு பொருளாதார குற்றவாளி துபையில் கைது



புதுடெல்லி, மார்ச் 1:

பொதுமக்களிடம் ரூ.1,000 கோடி மோசடி செய்த உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த தலைமறைவு பொருளாதார குற்றவாளி ரஷீத் நசீம், துபையில் கைது செய்யப்பட்டார்.

உத்தர பிரதேசத்தில் 'ஷைன் சிட்டி' குழுமம் என்ற பெயரில் மனை வணிகம் உள்ளிட்ட தொழில்களை நடத்தி வந்த ரஷீத் நசீம், நிலத்தில் முதலீடு, அதிக வட்டி என்ற பெயரில் பொதுமக்களிடம் இருந்து ரூ.800 கோடி முதல் ரூ.1,000 கோடி வரை வசூலித்துவிட்டு, அதைத் திருப்பிச் செலுத்தாமல் வெளிநாட்டுக்குத் தப்பி ஓடினார். முதலில் நேபாளத்துக்குச் சென்ற நசீம், அங்கிருந்து துபை சென்று தலைமறைவானார்.

அவர் மீது உத்தர பிரதேசத்தில் மட்டும் 554 மோசடி வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. லக்னௌ பணமோசடி தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்று வந்தன. கடந்த ஆண்டு ஏப்ரலில் அவர் தலைமறைவு பொருளாதார குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். டிசம்பரில் நசீம் மற்றும் அவரது குழுமத்துக்குச் சொந்தமான ரூ.127.98 கோடி மதிப்பிலான நிலத்தை நீதிமன்றம் முடக்கியது.

அமலாக்கத் துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகள் நசீம் மீது பல்வேறு வழக்குகளைப் பதிவு செய்து அவரை தீவிரமாகத் தேடி வந்தன.

ஐக்கிய அரபு அமீரகத்தில் பதுங்கி இருந்த அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தியாவில் அவர் மீதான வழக்குகள், கைது ஆணை உள்ளிட்ட விவரங்கள் அந்நாட்டு அரசுக்கு கடந்த ஜனவரியில் அனுப்பி வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் துபையில் பதுங்கியிருந்த அவரை ஐக்கிய அரபு அமீரக காவல் துறையினர் கைது செய்தனர்.

அவர் விரைவில் விசாரணைக்காக இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவார் என்று தெரிகிறது.

# 79 நாடுகளுக்கு 99 முறை பயணங்கள்! 19 நாடாளுமன்றங்களில் உரை! பிரதமர் மோடி சாதனை!

புதுடெல்லி, மார்ச் 1:

பிரதமர் நரேந்திர மோடி 2014 ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்றத்தில் இருந்து பிப்ரவரி 2026 வரை 79 நாடுகளுக்கு 99 முறை பயணங்கள் மேற்கொண்டு 19 வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றி சாதனை படைத்துள்ளார். இது இந்தியாவின் நிர்வாகத் தலைவருக்கான சாதனை என பாஜக பாராட்டியிருப்பதுடன் இந்த சாதனையை "இந்தியாவின் வளர்ந்துவரும் உலகளாவிய அந்தஸ்து, ராஜதந்திர நம்பகத்தன்மை, தலைமைத்துவம் மற்றும் தார்மீக அதிகாரத்தின் பிரதிபலிப்பு" என்று கூறியுள்ளது.

இந்திய பிரதமர்களில் அதிகயளவில் வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றியவர்களில், குறிப்பாக அனைத்து காங்கிரஸ் பிரதமர்களையும் விட மோடி அதிகமாக உரையாற்றியுள்ளார்.

"பிரதமர் மோடி வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் பேசும்போது, உலகமே அவரது பேச்சை கேட்கிறது. அவர் அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக் கூட்டத்தில் உரை யாற்றியதிலிருந்து இஸ்ரேலின் நெசெட் வரை," என்று இதுவரை 19 வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றி உள்ளார் என்று பாஜக 'எக்ஸ்' பக்கத்தில் பதிவிட்டுள்ளது. இந்த சாதனையை அது "இந்தியாவின் வளர்ந்துவரும் உலகளாவிய அந்தஸ்து, ராஜதந்திர நம்பகத்தன்மை, தலைமைத்துவம் மற்றும் தார்மீக அதிகாரத்தின் பிரதிபலிப்பு" என்றும் அந்தந்த நாடுகளுக்கிடையேயான வர்த்தகம் மற்றும் நட்புறவையும் வலுப்படுத்தியுள்ளார்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் ஏழு வெளி நாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றியுள்ளார், இந்திரா காந்தி நான்கு மற்றும் ஜவஹர்லால் நேரு மூன்று நாடாளுமன்றங்களில் உரையாற்றியுள்ளார் . முன்னாள் பிரதமர்கள் ராஜீவ் காந்தி மற்றும் அடல் பிஹாரி வாஜ்பாய் ஆகியோர் தலா இரண்டு வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றியுள்ளனர்.

2014 ஆம் ஆண்டு, பதவியேற்ற சிறிது நேரத்திலேயே, மோடி ஆஸ்திரேலியா, பிஜி, நேபாளம் மற்றும் பூட்டான் நாடாளுமன்றங்களில் உரையாற்றினார். அடுத்த ஆண்டு, மார்ச் மாதம் மொரிஷியஸ் தேசிய சட்டப்பேரவையிலும், இலங்கை நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார். அதே ஆண்டில், மங்கோலியா நாடாளுமன்றத்தில் பெரிதும் பாராட்டப்பட்ட உரையை ஆற்றினார், பின்னர் நவம்பரில் இங்கிலாந்து நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார். டிசம்பர் 2015 இல் ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். ஜூன் 2016 இல் அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றியபோது அனைத்து உரைகளுக்கும் தாயாக இருந்தார். 2018 இல் அவர் உகாண்டா நாடாளுமன்றத்திலும், 2019 இல், மாலத்தீவு நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார். 2023 இல் மீண்டும் அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார்.

அமெரிக்க காங்கிரஸில் ஆற்றிய இரண்டாவது உரையில், "ஜனநாயகம் என்பது விவாதத்தையும் உரையாடலையும் வரவேற்கும் கருத்து. ஜனநாயகம் என்பது சிந்தனைக்கும் வெளிப்பாட்டிற்கும் சிறகுகளைத் தரும் கலாசாரம். பழங்காலத்திலிருந்தே இத்தகைய மதிப்புகளைக் கொண்டிருப்பது இந்தியாவுக்கு ஆசீர்வாதம். ஜனநாயக உணர்வின் பரிணாம வளர்ச்சியில், இந்தியா ஜனநாயகத்தின் தாய்."

2024 ஆம் ஆண்டு கயானா நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். ஜூலை 2025 இல் கானா நாடாளுமன்றத்தில் உரையாற்றினார், அதைத் தொடர்ந்து அதே மாதத்தில் டிரினிடாட் மற்றும் டொபாகோ நாடாளுமன்றத்திலும் நமீபியா நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார். அந்த ஆண்டின் பிற்பகுதியில், அவர் எத்தியோப்பியா நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார்.

பிப்ரவரி 2026 நிலவரப்படி, மோடி 79 நாடுகளுக்கு 99 முறை சர்வதேச பயணங்களை மேற்கொண்டு 19 நாடாளுமன்றங்களில் உரையாற்றி மோடி சாதனை படைத்துள்ளார்.

# நடிகர் திலீப் விடுவிக்கப்பட்டதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அரசு மேல்முறையீடு



திருவனந்தபுரம், மார்ச் 1:

மேல்முறையீட்டு மனுவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: நடிகை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் நடிகர் திலீப் மற்றும் சார்லி தாமஸ், சனில் குமார், சரத் ஆகிய 4 பேர் விடுவிக்கப்பட்டிருப்பது சட்டவிரோதமானது. மேலும் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட 6 பேருக்கு இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 376 டி-யின்கீழ் வாழ்நாள் சிறைத் தண்டனை வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால் நடிகை கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட இந்த வழக்கில் குறைந்தபட்ச தண்டனையான 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் அபராதத்தை மட்டுமே எர்ணாகுளம் முதன்மை அமர்வு நீதிமன்றம் விதித்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

பாதிக்கப்பட்ட நடிகையை கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்ததுடன் அதை படம்பிடித்து பிறருக்கு பகிர்ந்து கொடூர குற்றச் செயல்களில் குற்றவாளிகள் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, குற்றத்தின் தன்மை மற்றும் சூழலை கருத்தில்கொண்டு இந்த வழக்கில் இருந்து நடிகர் திலீப் உள்பட 4 பேர் விடுவிக்கப்பட்டதை ரத்து செய்ய வேண்டும். குற்றவாளிகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட தண்டனை மற்றும் அபராதத்தை மேலும் அதிகரிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கேரள அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீது உயர்நீதிமன்றத்தில் அடுத்த வாரம் விசாரணை நடைபெறவுள்ளது.

கடந்த 2017, பிப்ரவரி 17-ஆம் தேதி நடிகை பயணித்த காரில் அத்துமீறி நுழைந்த ஒரு கும்பல், அவரைக் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததுடன் அதை செல்போனில் படம்பிடித்தது. கேரளத்தையே உலுக்கிய இந்தச் சம்பவம் நடந்த சில நாள்களிலேயே முக்கியக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

வழக்கின் நீதிமன்ற விசாரணை 2020, ஜனவரியில் தொடங்கியது.

சம்பவம் நிகழ்ந்து 8 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஆண்டு நவ. 25-ஆம் தேதி விசாரணை முடிவடைந்த நிலையில் டிசம்பரில் தீர்ப்பு வழங்கப்பட்டது

# சபரிமலை தங்கக் கொடிமர முறைகேடு வழக்கு: நடிகர்கள் மோகன்லால், திலீப்பிடம் வாக்குமூலம் பதிவு

திருவனந்தபுரம், மார்ச் 1:

சபரிமலை ஐயப்பன் கோயிலில் துவாரபாலகர் சிலைகள் மற்றும் கருவறைக் கதவுகளின் தங்கக் கவசங்களில் தங்கம் மாயமானதாக சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) விசாரணை மேற்கொண்டுவரும் நிலையில், கடந்த 2017-இல் புதிய தங்கக் கொடிமரம் நிறுவப்பட்டதில் முறைகேடு நடந்ததாகக் கூறப்படும் விவகாரமும் பூதாகரமாகி வருகிறது.

உயர்நீதிமன்றம், மாநில ஊழல் தடுப்புப் பிரிவினர் முதல் கட்ட விசாரணை மேற்கொள்ள கடந்த பிப். 9-ஆம் தேதி உத்தரவிட்டது. ஒரு மாதத்துக்குள் விசாரணையை நிறைவு செய்து, அறிக்கை தாக்கல் செய்யவும் உத்தரவிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து, நன்கொடையாளர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யும் நடவடிக்கையை ஊழல் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். மொத்தம் 27 நன்கொடையாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் மத்திய அமைச்சர் சுரேஷ் கோபி, திரைப்பட இயக்குநர் ஷாஜி கைலாஷ், நடிகர்-எழுத்தாளர் ரெஞ்சி பணிக்கர், தயாரிப்பாளர் சுரேஷ் குமார் உள்ளிட்டோரிடம் ஏற்கெனவே வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, திருவனந்தபுரத்தில் நடிகர் மோகன்லாலிடமும், கொச்சியில் நடிகர் திலீப்பிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதுவரை 22 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. மேலும் நன்கொடையாளர்கள் யாரேனும் உள்ளனரா என்பதைக் கண்டறியும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

# இந்தியா வந்தார் கனடா பிரதமர் மார்க் கார்னி: மார்ச் 2-இல் பிரதமர் மோடியுடன் பேச்சு.

புதுடெல்லி, மார்ச் 1:

4 நாட்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வந்துள்ளார் மார்க் கார்னி. மகாராஷ்டிர மாநிலம், மும்பையை வந்தடைந்ததும் அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'உலக அளவில் வேகமாக வளரும் பெரும் பொருளாதாரம் இந்தியா. மும்பையில் இந்திய தொழில் துறையினருடன் கலந்துரையாடி, கனடா தொழில் துறையினர் மற்றும் பணியாளர்களுக்கான புதிய வாய்ப்புகளைத் திறக்கும் கூட்டுறவை ஏற்படுத்தவுள்ளேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் 2-இல் பிரதமருடன் சந்திப்பு: ஞாயிற்றுக்கிழமை தில்லிக்கு செல்லும் கார்னி, பிரதமர் மோடியுடன் திங்கள்கிழமை இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, முக்கியக் கனிமங்கள், வேளாண்மை, கல்வி, ஆராய்ச்சி, புத்தாக்கம், மக்கள் ரீதியிலான தொடர்புகள் உள்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை மேற்கொள்ளவுள்ளனர். வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரையும் கார்னி சந்தித்துப் பேசவுள்ளார். இந்தியா-கனடா உறவுகள் சீரடைந்துவரும் தருணத்தில், அந்நாட்டு பிரதமரின் இந்தியப் பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# 218 தரமற்ற - போலி மருந்துகள்: ஆய்வில் கண்டுபிடிப்பு

திருவனந்தபுரம், மார்ச் 1:

மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விற்பனையகங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 215 மருந்துகள் தரமற்றவையாகவும், 3 மருந்துகள் போலியாகவும் இருந்ததைக் கண்டறிந்துள்ளதாக மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

அவற்றை உற்பத்தி செய்த நிறுவனங்களிடம் அதுகுறித்து விளக்கம் கேட்கப்பட்டுள்ளதாகவும், அதன்பேரில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த மாதத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்து மாதிரிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அவற்றில் காய்ச்சல், சளித் தொற்று, கிருமித் தொற்று, ஜீரண மண்டல பாதிப்பு உள்ளிட்ட பாதிப்புகளுக்கு பயன்படுத்தப்படும் 215 மருந்துகள் தரமற்றவையாகவும், 3 மருந்துகள் போலியானதாகவும் இருந்தது கண்டறியப்பட்டது. இதையடுத்து அதன் விவரங்கள் மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

# அதிகளவில் குப்பை சேரும் கேதார்நாத் கோயில்: சுற்றுச்சூழல் மோசமடைவதாக புகார்




புதுடெல்லி, மார்ச் 1:

உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள பிரசித்தி பெற்ற புண்ணியத்தலங்களாக கேதார்நாத், பத்ரிநாத், கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகியவை உள்ளன. இவை சார்தாம் என்று அழைக்கப்படுகின்றன. இந்துக்கள் இந்த சார்தாம் கோயில்களுக்கு புனிதச் சுற்றுலா சென்று வருவதை புண்ணியமாகக் கருதுகின்றனர். குறிப்பாக கேதார்நாத் கோயிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக இந்தக் கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் இந்தக் கோயிலைச் சுற்றியும், மலைப்பகுதிகளிலும் அதிக அளவில் குப்பை சேர்வதாக ஒரு ஆய்வில் தெரியவந்துள்ளது. 2025-ம் ஆண்டில் மட்டும் இங்கு 21.4 மெட்ரிக் டன் குப்பை சேர்ந்துள்ளதாக அந்த ஆய்வு தெரிவிக்கிறது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 22 சதவீதம் அதிகமாகும். அதிக அளவில் இங்கு குப்பை சேர்வதால் இப்பகுதியின் சுற்றுச்சூழல் மோசமாகும் நிலை ஏற்படுவதாக அந்த ஆய்வு தெரிவிக்கிறது. இந்நிலையில் ரூ.3.13 கோடி மதிப்பிலான திடக்கழிவை பதப்படுத்தி வெளியேற்றும் கருவிகளை வாங்குவதற்காக திட்டமும் இன்னும் நிலுவையில் உள்ளதாக கேதார்நாத் கோயில் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.




## பல கோடி ரூபாய் சொத்து ஆவணத்துக்காக கொடைக்கானலில் தொழிலதிபர் கொலை - 9 பேர் கைது



**பழநி, மார்ச்.01:** பல கோடி ரூபாய் சொத்து ஆவணத்துக்காக கொடைக் கானலில் தொழிலதிபரும், நடிகையின் தந்தையுமான சூர்யநாராயணன் கொலை செய்யப்பட்டது தொடர்பாக 9 பேரை போலீஸார் கைது செய்தனர். மேலும், ஒருவரை தேடி வருகின்றனர்.

தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தைச் சேர்ந்தவர் சூர்யநாராயணன் (73). நடிகை விஷ்ணுபிரியாவின் தந்தையும், தொழிலதிபருமான இவருக்கு சொந்தமான தங்கும் விடுதி, கொடைக்கானலில் உள்ளது.

பிப்.21-ம் தேதி விடுதியில் தங்கியிருந்த இளைஞர்கள் சிலர், பணியாளர்களை ஒரு அறையிலும், சூர்யநாரா யணனை ஒரு அறையிலும் கயிற்றால் கட்டிப் போட்டனர்.

மேலும், சூர்யநாராயணனின் வாய், மூக்கை டேப்பால் சுற்றி மூச்சுவிட முடியாதபடி செய்து கொலை செய்தனர். பின்னர், அந்த விடுதியில் இருந்த முக்கிய ஆவணங்கள், நகை, பணம் மற்றும் சிசிடிவி ஹார்ட் டிஸ்க் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு தப்பி சென்றனர்.

இந்நிலையில் கயிற்றால் கட்டப்பட்டிருந்த ஒரு பணியாளர் அதிலிருந்து விடுவித்து கொண்டு போலீஸாருக்கு தகவல் தெரிவித்தார். அங்கு வந்த கொடைக்கானல் போலீஸார் சூர்யநாராயணனின் உடலை மீட்டு, அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அவரது மகளும், நடிகை யுமான விஷ்ணுபிரியா அளித்த புகாரின் பேரில், போலீஸார் வழக்குப்பதிவு செய்து குற்றவாளிகளை சிறப்பு தனிப்படை அமைத்து தேடினர்.

இதில் சோளிங்கர் பகுதியை சேர்ந்த ஷியாம் (31), அரக்கோணம் பகுதியைச் சேர்ந்த கோகுல்நாத் (26), ரஞ்சித்(32), திருவள்ளுவரை சேர்ந்த கிருஷ்ண பிரசாத் (25), அட்சய நடராஜ் (26), கார்த்தி (26), சென்னை சாலிகிராமத்தை சேர்ந்த கிரண் (36), அவரது தாயார் கிரிஜா (53), விடுதி பணியாளர் ஆறுமுகம் (54) ஆகியோரை கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து தங்க நகைகள், பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து ஆவணங்கள், 2 கார்களை பறிமுதல் செய்தனர். மேலும், தலைமறைவாக உள்ள மகேந்திரன் என்பவரை தேடி வருகின்றனர்.

போலீஸார் நடத்திய விசாரணையில், சூர் யநாராயணனின் உதவியாளராக இருந்த கிரிஜாவின் வீட்டில் அவர் சில காலம் தங்கியிருந்து மருத்துவ சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

உதவியாளராக மட்டுமின்றி பணத்தை இரட்டிப்பு செய்து தருவது போன்ற மோசடிகளிலும் கிரிஜா ஈடுபட்டு வந்துள்ளார். கிரிஜாவின் மகன் கிரணின் நண்பரான ஷியாமும் இந்த மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இதற்கிடையே, சூர்ய நாராயணனின் பல கோடி ரூபாய் மதிப்பிலான சொத்து ஆவணம் கொடைக்கானலில் இருப்பதாகவும், அதனை திருடி வந்தால் பணம் தருவதாகவும் கிரிஜாவும், கிரணும் ஷியாமிடம் கூறியுள்ளனர்.

ஷியாமும் தனது நண்பர்களுடன் கொடைக்கானலில் உள்ள சூர்ய நாராயணனின் விடுதியில் தங்கியிருந்து சொத்தின் ஆவணம், பணத்தை திருடு வதற்காக அவரை கட்டிப் போட்டுள்ளனர். சத்தம் போட்டு விடுவார் என்பதற்காக சூர்யநாராயணனின் வாயில் டேப்பை ஒட்டினர்.

இதில் மூச்சுத்திணறி இறந்து விட்டார். கிரிஜாவுக்கும், விடுதி பணியாளர் ஆறுமுகத்துக்கும் ஏற்கெனவே பழக்கம் இருந் துள்ளது. சம்பவத்தன்று, அந்த இளைஞர்கள் தன்னையும் கட்டி போட்டதாக ஆறுமுகம் நாடகமாடியது தெரிய வந்தது.

## கிருஷ்ணகிரியில் பாலியல் கொடுமையால் பெண் குழந்தை உயிரிழப்பு - திமுக நிர்வாகி கைது

**ஓசூர், மார்ச்.01:** அஞ்செட்டி அருகே பாலியல் தொந்தரவால் பெண் குழந்தை உயிரிழந்த சம்பவத்தில், திமுக இளைஞரணி நிர்வாகி கைது செய்யப்பட்டார். கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி பகுதியைச் சேர்ந்த 24 வயது பெண், கணவரைப் பிரிந்து, தாய் வீட்டில் வசித்து வருகிறார்.

இவர், தனது இரண்டரை வயது பெண் குழந்தைக்கு, கடந்த டிசம்பர் மாதம் 11-ம் தேதி வலிப்பு வந்ததாகக் கூறி, தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அங்கு மருத்துவர்கள் பரிசோதனை செய்ததில், குழந்தை ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

குழந்தை உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாக அப்பெண்ணின் கணவர் அஞ்செட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் குழந்தை சடலத்தைக் கைப்பற்றி, உடற்கூறு ஆய்வுக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

உடற்கூறு ஆய்வறிக்கையில், பாலியல் கொடுமையால் குழந்தை உயிரிழந்தது தெரியவந்தது. இதையடுத்து, குழந்தையை பாலியல் கொடுமை செய்ததாக ஜேசுராஜபுரம் கோம்பைக்காடு பகுதியைச் சேர்ந்த பெரியநாயகம்(40) என்பவரைப் போலீஸார் கைது செய்தனர்.

அவர் திமுக இளைஞரணி கிளைச் செயலாளராகப் பொறுப்பு வகிக்கிறார். அவருக்கும், இறந்த குழந்தையின் தாய்க்கும் தவறான பழக்கம் இருந்துள்ளது. அந்தப் பெண் வீட்டில் இல்லாத நேரத்தில் பெரியநாயகம் குழந்தையை பாலியல் கொடுமை செய்ததில், உடல்நலம் பாதிக்கப்பட்டு குழந்தை உயிரிழந்துள்ளது.

போக்சோ பிரிவில் பெரியநாயகம் மீது வழக்குப் பதிவுசெய்து, கைது செய்துள்ளதாக போலீஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில், “பச்சிளம் குழந்தையை பாலியல் கொடுமை செய்து, கொலை செய்துள்ள தகவல் அதிர்ச்சியளிக்கிறது.

திமுக ஆட்சி ஒழிந்தால் மட்டுமே, தமிழகத்தில் அனைவரும் பாதுகாப்பாக இருக்க முடியும்” என்று தெரிவித்துள்ளார். இதேபோல, பல்வேறு கட்சித் தலைவர்களும் இச்சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## திருவள்ளுவர் கோயில் கும்பாபிஷேகம் கோலாகலம்: மயிலாப்பூரில் திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம்





**சென்னை, மார்ச்.01:** மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயில் கும்பாபிஷேக விழா கோலாகலமாக நடைபெற்றது. திருவள்ளுவர் பிறந்ததாகக் கருதப்படும் சென்னை மயிலாப்பூரில் சுமார் 1,300 ஆண்டுகள் பழமையான அவரது கோயில் அமைந்துள்ளது.

முண்டகக்கண்ணி அம்மன் கோயிலின் சார்பு கோயிலான இத்தலத்துக்கு கடந்த 1975-ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்நிலையில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ரூ.20.90 கோடி மதிப்பீட்டில் கடந்த ஆண்டு முதல் இக்கோயிலில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக, திருவள்ளுவர் அவதரித்த திருத்தலம், வாசுகி கோயில், முப்பால் மண்டபம், பொற்றாமரைக் குளம் ஆகியவை முற்றிலும் கருங்கல் திருப்பணியாக மேற்கொள்ளப்பட்டது.

ஏகாம்பரேஸ்வரர், காமாட்சியம்மன், நடராஜர், பள்ளியறை, கருமாரியம்மன் சந்நிதி, பரிவார தெய்வங்களுக்கு தனித்தனி சந்நிதிகள், வாகன மண்டபம், நூலகம் போன்றவை புதிதாக கட்டப்பட்டன.

முப்பால் மண்டபத்தில் திருவள்ளுவரின் 1,330 திருக்குறள்களும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டன.

திருப்பணிகள் நிறைவடைந்த நிலையில், கும்பாபிஷேக ஏற்பாடுகள் தொடங்கின. கடந்த 24-ம் தேதி தேவதா அனுக்ஞை, ஸ்ரீவிக்னேஸ்வர பூஜை, புண்யாக வாசனம், கோ பூஜை, ஷோடச மஹா கணபதி ஹோமம், மகாலட்சுமி ஹோமம், நவக்கிரக ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனையுடன் கும்பாபிஷேக விழா தொடங்கியது.

தொடர்ந்து, சூர்யா அக்னி சங்கிரகணம், யாகசாலை நியமனம், அங்குரா அர்ப்பண பூஜை, கும்ப அலங்காரம் ஆகியவற்றைத் தொடர்ந்து, 1,2,3-ம் கால யாகசாலை பூஜைகள் நடைபெற்றன.

நேற்று காலை 4-ம் கால யாக சாலை பூஜை, வேதபாராயணம், மஹா பூர்ணாஹுதி தீபாராதனை நடைபெற்றது. 9 மணிக்கு யாத்திரா தானம், கலச புறப்பாடு நடைபெற்று, அனைத்து விமானங்களுக்கும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. திரளான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.


அவர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டு, பிரசாதம் வழங்கப்பட்டது. இரவு 7 மணிக்கு திருக்கல்யாண உற்சவம், சுவாமி வீதிஉலா நடைபெற்றது.

இந்த விழாவில் மயிலாப்பூர் எம்எல்ஏ வேலு, அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், துணை ஆணையர் சி.நித்யா, விஜிபி குழுமத் தலைவர் வி.ஜி.சந்தோசம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மார்ச் 5 வரை லேசான மழைக்கு வாய்ப்பு

**சென்னை, மார்ச்.01:** தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் நாளை (பிப்.28) முதல் மார்ச் 5-ம் தேதி வரை லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட தகவல்: தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (பிப்.28) முதல் மார்ச் 5-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.



இதர தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். தமிழக கடலோர பகுதிகளில் நாளை ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி, அதிகபட்சமாக தென்காசி மாவட்டம் ஆயிக்குடியில் 7 செமீ, குண்டாறு செங்கோட்டை, ராமநதி அணைப் பகுதி, கோவை மாவட்டம் உபாசி, வால்பாறையில் தலா 4 செமீ, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டம், மாம்பழத்துறையாறு, பாலமோர், கோவை மாவட்டம் தொண்டாமுத்தூரில் தலா 3 மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் கோவை விமான நிலையத்தில் இருந்து 3.09 லட்சம் பேர் பயணம்




**கோவை, மார்ச்.01:** கோவை விமான நிலையத்தில் இருந்து சென்னை, மும்பை, பெங்களூரு, டெல்லி, ஐதராபாத், புனே, கோவா ஆகிய உள்நாட்டு பகுதிகளுக்கும், சிங்கப்பூர், ஷார்ஜா, அபுதாபி ஆகிய வெளிநாடுகளுக்கும் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே கோவை விமான நிலையத்தில் விமானங்கள் இயக்கம், பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதத்தில் நடைபெற்ற விமான போக்குவரத்து மற்றும் சரக்கு போக்குவரத்து குறித்த விவரங்களை விமான நிலைய ஆணையம் வெளியிட்டுள்ளது.

இதன்படி கோவை விமான நிலையத்தில் ஜனவரி மாதத்தில் மொத்தம் 1,871 விமானங்கள் இயக்கப்பட்டுள்ளன. இது கடந்தாண்டு ஜனவரி மாதத்தை காட்டிலும் 8.3 சதவீதம் குறைவாகும்.


இந்த மாதத்தில் கோவை விமான நிலையத்தில் இருந்து வெளிநாட்டு நகரங்களுக்கு 26 ஆயிரத்து 733 பேர் பயணம் செய்துள்ளனர். இது கடந்தாண்டை விட 9.3 சதவீதம் குறைவாகும்.

அதேசமயம் உள்நாட்டு நகரங்களுக்கு 2 லட்சத்து 82 ஆயிரத்து 731 பேர் பயணம் செய்துள்ளனர். இது கடந்தாண்டை விட 7.4 சதவீதம் அதிகமாகும்.

ஜனவரி மாதத்தில் மொத்தம் 3 லட்சத்து 9 ஆயிரத்து 464 பேர் பயணம் செய்துள்ளனர். இது கடந்த ஆண்டை விட 5.7 சதவீதம் அதிகமாகும். விமான இயக்கங்களின் எண்ணிக்கை குறைந்து இருந்தாலும், விமான பயணிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

இதேபோன்று கோவை விமான நிலையத்தில் வெளிநாட்டு நகரங்களுக்கு 130.5 மெட்ரிக் டன் சரக்குகளும், உள்நாட்டு நகரங்களுக்கு 830 மெட்ரிக் டன் சரக்குகளும் என மொத்தம் 960.5 மெட்ரிக் டன் சரக்குகளும் கையாளப்பட்டுள்ளது.

## ஒகேனக்கல்லில் நீர்வரத்து 3,000 கனஅடியாக உயர்வு



**தருமபுரி / மேட்டூர், மார்ச்.01:** ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து விநாடிக்கு 3,000 கன அடியாக உயர்ந்துள்ளது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் கடந்த 25-ம் தேதி காலை 6 மணிக்கு விநாடிக்கு 700 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 3,000 கனஅடியாக உயர்ந்தது.

இதனிடையே, மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 38 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று 50 கனஅடியாக அதிகரித்தது.

அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2,500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

தண் ணீர் திறப்பைவிட நீர்வரத்து குறைவாக உள்ளதால் நீர் மட்டம் சரிந்து வருகிறது.

அணையின் நீர்மட்டம் 88 அடியிலிருந்து 87.79 அடியாகவும், நீர் இருப்பு 50.40 டிஎம்சியிலிருந்து 50.16 டிஎம்சியாகவும் குறைந்துள்ளது.

## அஜித்குமார் வழக்கில் டிஎஸ்பி நீதிமன்றத்தில் ஆஜர்: பிடிவாரன்ட்டை ரத்து செய்து நீதிபதி உத்தரவு

**மதுரை, மார்ச்.01:** சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயில் காவலாளி அஜித்குமார், தனிப்படைக் காவலர்கள் தாக்கப் பட்டதில் உயிரிழந்தார். இந்த வழக்கில் தனிப்படைக் காவலர்கள் 6 பேரை சிபிஐ கைது செய்தது.

கூடுதல் குற்றப் பத்திரிகையில் மானாமதுரை டிஎஸ்பியாக இருந்த சண்முகசுந்தரம், திருப்புவனம் காவல் ஆய்வாளர் ரமேஷ்குமார், உதவி ஆய்வாளர் சிவக்குமார், தலைமைக் காவலர் இளையராஜா ஆகியோர் எதிரிகளாக சேர்க்கப்பட்டனர்.

பின்னர், சண்முகசுந்தரம் உட்பட 4 பேரும், மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராக உத்தர விடப்பட்டது. இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது சண்முகசுந்தரம் ஆஜராகவில்லை.

இதையடுத்து, டிஎஸ்பி சண்முகசுந்தரத்துக்கு எதிராக ஜாமீனில் வர முடியாத



பிடிவாரன்ட் பிறப்பித்து, அவரைக் கைது செய்து மார்ச் 5-ல் ஆஜர்படுத்த சிபிஐக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நிலையில், டிஎஸ்பி சண்முகசுந்தரம் தலைமைத் குற்றவியல் நீதித்துறை நடுவர் செல்வபாண்டி முன்னிலையில் நேற்று ஆஜராகி, பிடிவாரன்ட்டை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்தார். இதையடுத்து, பிடிவாரன்ட்டை ரத்து செய்து, மார்ச் 5-ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை தள்ளிவைத்தார்.

## கச்சத்தீவில் அந்தோணியார் திருவிழா தொடக்கம்



**ராமேசுவரம், மார்ச்.01:** கச்சத்தீவில் புனித அந்தோணியார் ஆலயத் திருவிழா நேற்று தொடங்கியது. இன்று காலை சிறப்புத் திருப்பலி நடைபெறுகிறது. இதையொட்டி, நேற்று மாலை கச்சத்தீவு அந்தோணியார் தேவாலயம் எதிரேயுள்ள கொடி மரத்தில் நெடுந்தீவு பங்குத் தந்தை பத்திநாதன் கொடியேற்றிவைத்து, விழா வைத் தொடங்கி வைத்தார். ராமேசுவரம் வேர்க்கோடு பங்குத்தந்தை தாமஸ் பரிபாலனன், யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம். முதன்மைகுரு ஜோசப் தாஸ் ஜெபரத்தினம் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து, திருச்ஜெபமாலை, இருநாட்டு மக்களும் சேர்ந்து தூக்கி வரும் சிலுவைப் பாதை நிகழ்ச்சி, நற்கருணை ஆராதனை, அந்தோணியார் தேரோட்டம் நடைபெற்றது.

இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து வந்திருந்த பங்குத் தந்தையர்கள், அருட் சகோதரிகள் மற்றும் பக்தர்கள் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, 92 விசைப் படகு, 26 நாட்டுப் படகு என 118 படகுகளில் இந்திய பக்தர்கள் 3,741 பக்தர்கள் கச்சத்தீவுக்கு வந்தனர். அவரை நேற்று காலை ராமநாதபுரம் ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், ராமேசுவரம் மீன்பிடி துறை முகத்திலிருந்து வழியனுப்பிவைத்தார்.

அவர்களது பாதுபாப்புப் பணியில் இந்திய கடற்படை கப்பல், கடலோரக் காவல் படை மற்றும் தமிழக மெரைன் போலீஸாரின் ரோந்துப் படகுகள் ஈடுபட்டன.

கச்சத்தீவில் பக்தர்களின் வசதிக்காக பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்று (பிப். 28) காலை சிறப்புத் திருப்பலி, கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுகிறது. கொடி இறக்கத்துக்குப் பிறகு இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த பக்தர்கள், தமது நாடுகளுக்குத் திரும்புகின்றனர்.

## போக்சோ வழக்கில் கைதான சப்-இன்ஸ்பெக்டர் தூக்குப்போட்டு தற்கொலை

**தருமபுரி, மார்ச்.01:** தருமபுரி அடுத்த வெண்ணாம்பட்டி பகுதியை சேர்ந்தவர் சகாதேவன் (வயது55). ஏரியூர் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்த இவர் கடந்த 2023 ஆண்டு அங்குள்ள ஒரு குழந்தைக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் பாதிக்கப்பட்ட குழந்தையின் பெற்றோர் பென்னாகரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். அந்த புகாரின் பேரில் போலீசார் சகாதேவன் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குபதிவு செய்து சிறையில் அடைக்கப்பட்டனர். இதனால் அவரை பணிநீக்கம் செய்யப்பட்டது.

பின்னர் சகாதேவன் ஜாமீனில் வெளியே வந்தார். இதனால் மனவேதனையில் இருந்த அவர் பலமுறை வீட்டில் அழுது உள்ளார். குடும்பத்தினர் அவருக்கு ஆறுதல் கூறியுள்ளனர்.

இதையடுத்து சென்னைக்கு சென்று வருவதாக வீட்டில் கூறி விட்டு சென்ற அவர் நேற்றிரவு ஊருக்கு திரும்பினார்.

இந்த நிலையில் தருமபுரி ரெயில் நிலையம் அருகேயுள்ள மாந்தோப்பு என்கிற இடத்தில் மரத்தில் சகாதேவன் தூக்கில் தொங்கிய நிலையில் இன்று காலை பிணமாக கிடந்தார். இதனை பார்த்த அப்பகுதியில் அதிர்ச்சி அடைந்தனர்.

இது குறித்து தருமபுரி டவுன் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

மரத்தில் தூக்கில் பிணமாக கிடந்த சகா தேவன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தருமபுரி டவுன் போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இறந்த சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் சகா தேவனுக்கு மனைவி, ஒரு மகன், ஒரு மகன் உள்ளது குறிப்பிடதக்கது.

## உலகளவில் "ஜென்-சி" இளைஞர்களில் 36 சதவீதம் பேர் மட்டுமே மதுவை தவிர்க்கிறார்கள்- ஆய்வில் புதிய தகவல்



**சென்னை, மார்ச்.01:** உலகளவில் "ஜென்-சி" இளைஞர்களில் 36 சதவீதம் பேர் மட்டுமே மதுவை முற்றிலும் தவிர்ப்பதாக சமீபத்திய ஆய்வறிக்கையில் புதிய தகவல் வெளியாகி உள்ளது.

"மது வீட்டுக்கும் கேடு நாட்டுக்கும் கேடு". "மது நாட்டுக்கும், வீட்டுக்கும். உயிருக்கும் கேடு", "மது அருந்துதல் உடல்நலத்திற்கு கேடு, பாதுகாப்பாக இருப்பீர்" என்பது போன்ற பல விழிப்புணர்வு வாசகங்களை பெரும்பாலான இடங்களில் பார்க்கிறோம். இவ்வளவு விழிப்புணர்வு செய்தாலும், மது குடிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்தபாடில்லை.

சிறுவர்கள் கூட அதில் என்னதான் இருக்கிறது? என்று ருசி பார்க்கும் அளவுக்கு மது கலாசாரம் பெருகிவிட்டது. இப்படி இருக்கும் சூழலில் "யூரோமானிடர் இன்டர்நேஷனல்" என்ற சந்தை ஆய்வு மற்றும் நுகர்வோர் நுண்ணறிவு நிறுவனம் 'மதுபானங்களுக்கான உலக சந்தை' மற்றும் 'நுகர்வோரின் குரல்' என்ற தலைப்பில் ஆய்வறிக்கை ஒன்றை சமீபத்தில் வெளியிட்டு உள்ளது.

இந்த ஆய்வறிக்கை பல விஷயங்களை இந்த உலகத்துக்கு எடுத்துச் சொல்லியுள்ளது. அதிலும் இன்றைய இளம் தலைமுறையினர் மதுவுக்கு அடிமையாகி இருக்கிறார்களா? என்பதற்கான விடையையும் கொடுத்திருக்கிறது.

இந்தியா, அமெரிக்கா, சீனா, பிரேசில், பிரிட்டன் உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட முக்கிய நாடுகளில் இருக்கும் மதுபான சந்தைகளில் இந்த தகவல்கள் திரட்டப்பட்டிருக்கின்றன. அந்த ஆய்வறிக்கையில், உலகளவில் சட்டப்பூர்வமாக மது அருந்தும் வயதை எட்டியுள்ள 'ஜென்-சி' இளைஞர்களில் 36 சதவீதம் பேர் மதுவை அறவே தவிர்க்கிறார்கள். மதுவை தொட்டுக்கூட பார்த்தது இல்லை. மீதமுள்ள 64 சதவீதம் பேர் ஏதாவது ஒரு வகையில் மதுவை ருசிபார்த்தவர்களாகவே இருக்கிறார்கள். மது அருந்துபவர்களில் 53 சதவீதம் பேர் தாங்கள் வாங்கி பருகும் மதுவின் நுகர்வை குறைக்க முயற்சிக்கிறார்கள்.

இதுமட்டுமல்லாமல், மதுவையும், மதுவற்ற குளிர்பானங்களையும் மாறி, மாறி குடிக்கும் 'ஜீப்ரா ஸ்டிரைபிங்' என்ற கலாசாரத்தை இன்றைய இளைஞர்கள் கையில் எடுத்து இருக்கின்றனர். சமூக ஊடகங்களில் தங்களை பற்றிய பிம்பம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக 85 சதவீதம் இளைஞர்கள் பொது இடங்களில் மது குடிப்பதை தவிர்த்து வருகின்றனர்' என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதுமட்டுமல்லாமல், வாரம் ஒருமுறை மது குடிப்பவர்களின் எண்ணிக்கை 2020-ல் 23 சதவீதமாக இருந்த நிலையில், 2025-ல் அது 17 சதவீதமாக குறைந்திருப்பதாக ஆய்வில் கண்டறியப்பட்டு உள்ளது. மதுவை தவிர்ப்பவர்களில் 87 சதவீதம் பேர் நீண்டகால உடல்நல அபாயங்களை தவிர்க்க மதுவை அறவே தவிர்ப்பதாகவும், சேமிப்புக்காக 30 சதவீதம் பேர் அதனை தவிர்ப்பதாகவும் கூறியுள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க, ஆல்கஹால் இல்லாத பீர் மற்றும் பானங்களின் விற்பனை உலக சந்தையில் ஆண்டுக்கு 15 முதல் 20 சதவீதம் வரை வளர்ச்சி அடைந்து வருவதாக புள்ளிவிவரங்களுடன் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது.

இந்த ஆய்வறிக்கை உலகளவில் மதுபானங்களை பயன்படுத்துவோரின் சந்தை எண்ணிக்கை குறைந்துவருவதை சுட்டிக்காட்டினாலும், இந்தியாவில் அதன் பாதிப்பு உடனடியாக தெரியவில்லை. ஆனால் இந்தியர்களின் குடிப்பழக்கம் முன்பைவிட நிதானமாகவும், ஆரோக்கியம் சார்ந்து மாறி வருவதாகவும் சொல்லப்பட்டு உள்ளது.

## மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலின் பயன்பாடற்ற 34 கிலோ நகைகளை உருக்கி தங்கக் கட்டியாக மாற்ற வங்கியிடம் ஒப்படைப்பு

**சென்னை, மார்ச்.01:** இந்து சமய அறநிலையத் துறைகட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் பக்தர்களிடமிருந்து காணிக்கையாகப் பெறப்பட்டு பயன்படுத்த இயலாத பொன் இனங்களில் கல், அரக்கு, அழுக்குநீக்கப்பட்டு, மும்பையில் உள்ள மத்திய அரசின் தங்கஉருக்காலையில் உருக்கி, பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் துரைசாமி ராஜு, ரவிச்சந்திர பாபு, செல்வி மாலா ஆகியோரின் கண்காணிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், இது வரை 21 கோயில்களின் பயன்பாடற்ற தங்க நகைகளை உருக்கி கிடைக்கப் பெற்ற 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லிகிராம் தங்கக் கட்டிகள் எஸ்பிஐ-யின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் அந்தந்த கோயிலின் பெயரில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

இதன்மூலம் ஆண்டுக்கு ரூ.17 கோடியே 76 லட்சத்து 85 ஆயிரம் வட்டி கிடைக்கப் பெறுகிறது.

இந்த தொகை அந்தந்த கோயிலின் வளர்ச்சிப் பணிகளுக்கு செலவிடப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக நேற்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி துரைசாமி ராஜு முன்னிலையில் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலுக்கு காணிக்கையாக கிடைக்கப் பெற்று பயன்பாடற்ற 34 கிலோ 375 கிராம் எடையுள்ள தங்க நகைகளை உருக்கி சுத்த தங்கக் கட்டிகளாக மாற்ற எஸ்பிஐ-யிடம் ஒப்படைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர்கள் இரா.வான்மதி, பெ.க.கவெனிதா, எஸ்பிஐ சென்னை மத்திய மண்டல மேலாளர் இன்பரசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மதுரை விமான நிலையத்துக்கு கையகப்படுத்திய நிலத்தில் இருந்து மக்கள் வெளியேற வேண்டும்- 2 வாரம் கெடு




**மதுரை, மார்ச்.01:** மதுரை விமானநிலையத்துக்கு கையகப்படுத்திய நிலத்தில் இருந்து மக்கள் 2 வாரத்தில் வெளியேற வேண்டும் என மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டது. மதுரை அவனியாபுரம் சின்ன உடைப்பு பகுதியை சேர்ந்த சந்திரா உள்ளிட்ட 130 பேர், மதுரை ஐகோர்ட்டில் 2024-ம் ஆண்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:-

எங்கள் பகுதியில் மதுரை விமான நிலைய விரிவாக்க பணிகளுக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதற்கான இழப்பீடும் வழங்கினார்கள். ஆனால் விதிமுறைகளின்படி சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு நடவடிக்கையை எடுப்பது அரசின் கடமை.

இதற்காக அரசு எந்த நடவடிக்கையும்எடுக்கவில்லை. இதற்கிடையே எங்களை வெளியேற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எங்களுக்கு மறுவாழ்வு, மறுகுடியமர்வு வசதிகளை செய்து தர உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தனர்.

இந்த வழக்கை ஏற்கனவே விசாரித்த ஐகோர்ட்டு, சின்ன உடைப்பு மக்களை அங்கிருந்து வெளியேற்ற தடை விதித்து உத்தரவிட்டு இருந்தது.

ஆனால் 2008-ம் ஆண்டிலேயே விமான நிலையத்துக்கு நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் தொடங்கி, பயனாளிகளுக்கு இழப்பீடு உள்ளிட்டவை வழங்கப்பட்டுவிட்டன. தற்போது 64 பயனாளிகளுக்கு கருணை அடிப்படையில் வீட்டுமனைகள் வழங்கி அதில் வீடுகள் கட்டித்தரப்படும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்தநிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் ஜெயச்சந்திரன், ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:-

மதுரை விமானநிலைய விரிவாக்கத்துக்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் இருந்து சின்ன உடைப்பு மக்கள் (அதாவது இந்த வழக்கு தொடர்ந்தவர்கள்) 2 வாரத்தில் வெளியேற வேண்டும். தவறும்பட்சத்தில் அவர்களை வெளியேற்ற அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவர்களுக்கு ஏற்கனவே அரசு உறுதி அளித்தபடி தலா 2 சென்ட் வீட்டு மனை வழங்குவதற்கு கலெக்டரிடம் மனு அளிக்க வேண்டும். அதன்பேரில் மனுதாரர்களுக்கு வீடு கட்டித்தர உரிய நிதியை ஒதுக்கீடு செய்ய மதுரை மாவட்ட கலெக்டர் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## ரம்ஜான் நோன்பு எதிரொலி - ஐக்கிய அரபு நாடுகளுக்கு 70 சதவீதம் முட்டை ஏற்றுமதி பாதிப்பு



**நாமக்கல், மார்ச்.01:** நாமக்கல் மண்டலத்தில் சுமார் 1,100-க்கும் மேற்பட்ட முட்டைகோழிப்பண்ணைகள் உள்ளன. இவற்றில் சுமார் 10 கோடி கோழிகள் வளர்க்கப்படுகின்றன. தினசரி சுமார் 7 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. நாள்தோறும் சுமார் 70 லட்சம் முட்டைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவில் நாமக்கல் பகுதியில் இருந்து மட்டுமே முட்டை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சவுதி அரேபியா, ஈரான், ஈராக், ஓமன், பஹ்ரைன், மஸ்கட் போன்ற ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் ஒரு சில ஆப்பிரிக்க நாடுகளுக்கும் முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் துபாய், ஓமன், பஹ்ரைன், மஸ்கட் உள்ளிட்ட ஐக்கிய அரபு நாடுகளில் தற்போது ரம்ஜான் நோன்பு தொடங்கியுள்ளது. முட்டையின் நுகர்வு கணிசமாக குறைந்துள்ளது. இதனால் அந்நாடுகளுக்கான முட்டை ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து நாமக்கல்லை சேர்ந்த முட்டை ஏற்றுமதியாளர் செந்தில் கூறுகையில், நாமக்கல்லில் இருந்து வளைகுடா நாடுகளான துபாய், கத்தார், ஓமன், பஹ்ரைன், சார்ஜா ஆகிய நாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு 50 லட்சம் முட்டைகள் ஏற்றுமதி ஆகி வந்தது. தற்போது ரமலான் நோன்பு கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் அந்த நாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி 70 சதவீதம் வரை குறைந்துள்ளது. 10 லட்சம் முட்டைகள் மட்டுமே தற்போது ஏற்றுமதி ஆகி வருகிறது என்றார்.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் பறவை காய்ச்சல் தொற்று சமீபத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு கருதி இந்தியாவில் இருந்து கோழி இறைச்சி, முட்டை இறக்குமதி செய்ய சவுதி அரேபியா தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## குரூப் 2 மற்றும் 2ஏ முதன்மை தேர்வு- கட்டணம் செலுத்த கூடுதல் அவகாசம்




**சென்னை, மார்ச்.01:** குரூப்-2 மற்றும் குரூப் 2ஏ முதன்மை தேர்வுக்கான கட்டணம் செலுத்தாத சில தேர்வர்களுக்கு வரும் மார்ச் 5ம் தேதி வரை தேர்வு கட்டணம் செலுத்த அவகாசம் வழங்கப்படும் என டிஎன்பிஎஸ்சி அறிவிக்கப்பட்டுள்ளது.

முதன்மைத் தேர்விற்குத் தகுதி பெற்றவர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் ரூ. 200 தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

இந்நிலையில், தேர்வுக்கான கட்டணத்தைச் செலுத்துவதில் சிரமங்களை எதிர்கொண்ட விண்ணப்பதாரர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கால அவகாசத்தை நீட்டித்துள்ளது.

எஸ்எம்எஸ் மற்றும் மின்னஞ்சல் மூலம் தேர்வர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு கூடுதல் அவகாசம் என்பதால், கடைசி நேரத் தொழில்நுட்பக் கோளாறுகளைத் தவிர்க்க முன்கூட்டியே பணிகளை முடிப்பது நல்லது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## அ.தி.மு.க. என்றால் எடப்பாடி பழனிசாமி மட்டும்தான் - ஆர்.பி.உதயகுமார்



**சென்னை, மார்ச்.01:** முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இன்று தி.மு.க.வில் இணைந்தார். சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் அவர் தன்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டார். அவருடன் அவரது மகன் ரவீந்திரநாத் மற்றும் அவரது ஆதரவு எம்.எல்.ஏ. ஐயப்பனும் இணைந்தனர்.

இதுதொடர்பாக சட்டசபை எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஆர்.பி.உதயகுமார் கூறுகையில்,

* அ.தி.மு.க. என்று சொன்னால் அது எடப்பாடி பழனிசாமி மட்டும்தான். ஓ.பன்னீர்செல்வம் குறித்து கவலைப்பட தேவையில்லை.

* அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டவர்கள் பல்வேறு இடங்களுக்கு முகாம் மாறி செல்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

## "திமுக கூட்டணி மேலும் வலுவடைந்துள்ளது" - திருமா கருத்து



**சென்னை, மார்ச்.01:** ஓபிஎஸ் சேர்ந்ததன் மூலம் திமுக கூட்டணி வலுவடைந்துள்ளது. என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் நேற்று மதியம் சென்னையில் இருந்து இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில் மதுரைக்கு சென்றார். முன்னதாக, சென்னை விமானநிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஓ.பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்ததன் மூலம் மதச்சார்பற்ற கூட்டணி மேலும் வலுவடைந்துள்ளது. அவர் முதல்வராக பணியாற்றியவர்.

ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கு உரியவராக விளங்கியவர். அதிமுகவை ஒருங்கிணைத்து, ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் விரும்பியதை நாடு அறியும். ஆனால் அவர் முயற்சி வெற்றி பெறவில்லை. இந்நிலையில் அவர் பாஜக போன்ற கட்சிகளில் சேராமல், மீண்டும் தன்னை, திராவிட பாசறையில் இணைத்து கொண்டது, அவர் மீதான நன்மதிப்பை உயர்த்துகிறது.

அவர் பாஜகவுடன் நெருக்கமாக இருக்கிறார். பாஜக சொல்படி செயல்படுகிறார் என்ற விமர்சனங்கள், அவர் மீது இருந்தன. ஆனால் அவர் எடுத்துள்ள முடிவு, அவர் நிதானமானவர், பெரியார், அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகிய தலைவர்களின் வழி வந்தவர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

திமுக கூட்டணி எங்களை பேச்சு வார்த்தைக்கு 28-ம் தேதி அழைத்தனர். அன்று நான் ஊரில் இல்லை. எனவே வருகின்ற மார்ச் 2-ம் தேதி சந்திக்கலாம் என்று கூறியிருக்கின்றனர். எனது தலைமையில் 2 அல்லது 3 பேர் அந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வோம். அதற்கு தனியாக நாங்கள் குழு அமைக்கவில்லை. திமுக கூட்டணி மெகா கூட்டணி. நிறைய கட்சிகள் இணைந்து கொண்டு இருக்கின்றன. எல்லாவற்றையும் சீர்தூக்கி பார்த்து, அந்தந்த கட்சிகளின் வலிமைக்கு ஏற்ப முதல்வர் இடங்களை வழங்குவார்.

காங்கிரஸ் தேசிய கட்சி. கூட்டணி குறித்து இறுதி முடிவு டெல்லியில் தான் எடுப்பார்கள். டெல்லியில் இருந்து ஏதாவது தகவல் வந்தால், அதற்கு நாம் பதில் கூறலாம். அது தவிர இங்கு உள்ளவர்கள் மாற்று கருத்துகளை, காங்கிரசில் கூறுவது வழக்கம். அதை ஒரு பொருட்டாக எடுத்துக்கொண்டு பதில் கூற முடியாது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வருகிற 4-ந்தேதி தஞ்சாவூர் செல்லும் த.வெ.க. தலைவர் விஜய்



**சென்னை, மார்ச்.01:** தமிழக சட்டசபை தேர்தல் அறிவிப்புக்கு இன்னும் சில தினங்களே உள்ள நிலையில், அரசியல் கட்சிகள் கூட்டணி, தொகுதி பங்கீடு, வேட்பாளர்கள் தேர்வு உள்ளிட்ட பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

அந்த வகையில் த.வெ.க. தலைவர் விஜய் கடந்த 23-ந்தேதி வேலூரில் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தை நடத்தினார். இதனை தொடர்ந்து அடுத்த கூட்டம் தஞ்சாவூரில் நடைபெறும் என தகவல் வெளியாகி இருந்தன.

இந்த நிலையில், த.வெ.க. தலைவர் விஜயின் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் வரும் 4-ந்தேதி தஞ்சாவூரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சட்டசபை தேர்தலை முன்னிட்டு மாவட்ட வாரியாக நிர்வாகிகளை சந்தித்து வரும் விஜய் வருகிற புதன்கிழமை தஞ்சாவூரில் நிர்வாகிகளை சந்திக்கிறார்.

இதற்கான பணிகள் நடைபெற்று வரும் நிலையில், அனுமதி கோரி த.வெ.க. நிர்வாகிகள் தரப்பில் காவல்துறையிடம் இன்று மனு அளிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com